[illegible]

V.3. N10·30. 24 July 1930

JL
ത211, N28KN
N30·3:30
189114

1255

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஞு ஜூலை மீ 31உ [No. 30.

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 581 |
| 2. | அப்பர் (வில்வித்தை) E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L. | 583 |
| 3. | மாதவி மாதவம்—பொ. இராமானுஜன் | 584 |
| 4. | நம்மாழ்வார் வைபவம் (1ம் பத்து—9ம் பதிகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. | 586 |
| 5. | தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப்படலம்) | 588 |
| 6. | மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 590 |
| 7. | கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. | 592 |
| 8. | குறுந்தொகை (பாட்டு 96—105) K. இராமரத்நம் ஐயர் B. A. | 594 |
| 9. | வர்த்தமானம் | 599 |


## கலாநிலயம்

### உரிமையாற் பெரிய ராகார்.

உரிமையைப் பெறுவதற்கென்று மன்றாடுவதில் உயர்வில்லை. உரிமையென் றொன் றுளதெனு மெண்ணமே பொய்ம்மையென முன்னோர் தலையங்கத்தில் (2-41) காட்டியிருக்கின்றோம். எவ்வெவர்மாட்டும் நாம் செலுத்தவேண்டிய கடமைகள் உளவேயன்றி எவரிடத்தும் நாம் வற்புறுத்திப் பெறுவதற்கொத்த உரிமையும் இருக்கின்றதென்று எண்ணுவது மதியின் மயக்கமே யாகும். உரிமையென்ற சொலிற்கு ஒருபொருள் வேண்டுமாயின் அது 'நம்முடைய கடமையைச் செய்வதற்கு இயலும்வகை எய்துதல்' என்னுமொரு பொருளிலேயே இயங்கக்கூடும். பிற பொருள்களெல்லாம் பொய்; பொய்யால் விளையும் இடும்பையுள் புகுத்தற்கே ஏற்றன. இரந்து ஏற்பதும் வலிந்து கவர்வதும் ஆகிய இரண்டும் இழிதகைக் கொடுமைகளாகும் என்னுமிவ் வுண்மை மற்றெவைக்கும் ஒவ்வுவதுபோல் உரிமையின் திறத்திலும் ஒவ்வும். தன்னுடைய உரிமையைப் பிறர் கைக்கொள்ளா வண்ணம் பொருது காப்பது வீரச் செயல்போல் வெளிபபார்வைக்குத் தோன்றமெனினும் மெய்வீரத்தின் உயருருவம் முற்றிலும் வேறாயதொன்று. உரிமையையும் உவந்துவந்து உற்றவிடத்தில் வழங்குதற்கொத்த உதாரமே உண்மையான வீரம். தியாகம் என்பதும் அதுவே. உரிமையைப் பெறுவதற்கென்று வேறு சிலவற்றைத் தியாகம் செய்வதெல்லாம் ஆழ்ந்து நோக்குமிடத்துக் கைக்கூலியாகவே முடியும். உடைமைகிடக்க உரிமையுந் தனக்கொன் றுளதென நினையாத நெஞ்சத்தின் தூய்மையை உன்னுவாருள்ளத்திற்றான் தெய்வவொளி திகழ்வதாகும். அவருக்கே பொன்னம்பலன் கிருபை யிருக்கின்றது; அவரே பெரியவர். கடவுளைக் கோயிலிற் கண்டு கைதொழு முரிமை யாவர்க்கு முளதென் றோங்கியசொல்லால் இரைவது இக்காலத் தாரவாரங்களி லொன்று. இவ்வுரிமை உளதென்பது ஒரு வழியில் நோக்குங்கால் ஐயமில்லை. அதனை மறுப்பதும் அறனன்று. எனினும், அவ்வுரிமையைப் பாராட்டாத நம் நாயனார் திருநாளைப்போவாரிலும் பெரியார் யாரே உளர்.

இவ்வகை யெண்ணங்கள் இன்று எம்மனத்திலெழுவதற்கோர் செவ்விதந்தன, எமது நண்பர் ஸ்ரீமான். T. N. சேஷாசல ஐயருடன் உரையாடி வருகையில் நிகழ்ந்த சில சொற்கள். சென்னையில் இரவுப்பாடசாலைகள் அமைத்து அவரும் அவர் நண்பர்கள் சிலரும் சேர்ந்து தொழிலாளர்களுக்குப் பல வாண்டுகளாகக் கல்வி கற்பித்து வருகின்றாரென்பதை முன்னோர்முறை இவ்விதழ்களில் தெரிவித்திருக்கின்றோம். இப்பாடசாலைகளில் ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களுடன் தமிழிலக்கியங்களில் உயர்தரப் பயிற்சியே முக்கியமாக அளிக்கப்படுகின்றது. பகற்காலத்தில் எந்திரச்சாலைகளிலும் வேறு இடங்களிலும் கூலிக்கு வேலைசெய்யும் நடுவயது ஆட்கள் இரவில் இப்பாடசாலைகளில் இலவசமாய்த் தமிழ்க்கல்வி நன்கு பெற்று இலக்கியச்சுவையில் ஈடுபடுவதுமாத்திரமன்றி, ஒழுக்கம் அடக்கம் ஈகை அனைய நற்குணங்களு முடையவராகின்றனர். சாதி

பேதமில்லாமல் நடக்கும் இப்பாடசாலைகளில் தீண்டுவார் தீண்டாதாரென்னும் எல்லாச் சாதியினரும் ஒன்றுசேர்ந்து கற்கின்றனர். இதனிற் கற்று முடித்தவர் பலர், கற்றனவற்றைத் தாமாகவே மேன்மேலும் விருத்திசெய்துகொண்டு வாழ்ந்துவருகின்றனர்

இத்தகைய இரவுப்பாடசாலை யொன்று சென்னைக்கு அருகிலுள்ள வில்லிவாக்கத்திலும் ஏற்படுத்த நினைத்துச் சிறிதுகாலத்திற்குமுன் அங்குச் சென்று, இடம்முதலியவசதிகள் எவ்வாறிருக்கின்றனவென்று காண ஸ்ரீமான் T. N. சேஷாசலஐயரும் அவர்நண்பர்களும் சுற்றிவந்தனராம். அவ்வாறு சுற்றிவருகையில் சென்னையிலிருக்கும் இவரது இரவுப்பாடசாலைகளில் படித்துமுடித்து அவ்வூரில் வசித்திருந்த ஆதித்திராவிடர் சிலர் இவரொடு சேர்ந்து உரையாடி ஏகலாயினர். ஏகிய இவர் பல இடங்களையும் பார்த்துக்கொண்டு செல்கையில் ஒரு தெருவண்டை நெருங்கியபோது உடன்வந்த அந்த ஆதித்திராவிடர்; "ஐய, இனிநாங்கள் மீள்வோம். இத்தெருவழி நாங்கள்செல்லலாகாதென்று இவ்வூரார் தடுக்கின்றனர். எங்களுக்கு விடை தருவீர்" என்றுரைத்து நின்றனராம். அப்பொழுது, ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயருடன் போந்திருந்த நண்பர்களில் ஒருவர், இவ்வாறுரைத்த இவ்வாதித்திராவிட மாணவர்களது மனதைச் சோதிக்கும் பொருட்டு, "அவர் தடுத்தால் நீங்களேன் அஞ்சவேண்டும்? எங்களொடு வருகின்ற உங்களை இவ்வூரார் ஒன்றுஞ் செய்யார். வாருங்கள்" என்று அழைத்தனராம். அதற்கவர்கள், "அச்சத்தால் நாங்கள் இது செப்பினேம் அல்லோம். நாங்கள் இவ்வழிச் செல்வதால் இத்தெருவில் உள்ளவர் ஏதோ தாம் இழந்துவிடுவதாக எண்ணி மனம் வருந்துகின்றனர். அவ்வாறு அவர் வருந்துபடி நாங்கள் செய்வானேன்", என மறுமொழிதர, ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் அவர்களுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டனர்.

இந்நிகழ்ச்சியை எம்மிடத்திற்கூறி, "இம்மறுமொழியையும், அதனுளடங்கிய அம் மனப்பான்மையையும் பற்றி நீர் யாது நினைக்கின்றீர்" என்று எமது நண்பர் வினவினர். அவ்வேளை, அமெரிக்காவிலுள்ள சிகாகோ சர்வகலாசாலைத் தத்துவசாஸ்திர ஆசிரியராகிய டாக்டர் ஹேரால்ட், என்பவரும் எம்முடன் இருந்தனர். யாம் அவரை நோக்கி "ஐய, நீர், உரிமைக்கொடி உயர்த்திய தேயத்தைச்சேர்ந்தவர். தத்துவசாத்திர வல்லுனருமாக இருக்கின்றீர் எந்தத தெருவழியேயும் போகும் உரிமை யாவருக்கு மிருக்கின்றது. எனினும் அவ்வுரிமையை வற்புறுத்துவதோ, மற்று விட்டுவிடுவதோ, பெருமை? இந்த ஆதித்திராவிடர், ஊராரை வருத்துவானேனென்று விலகிச்சென்றது, அவரது நிலைமையின் தாழ்மையையோ அல்லது உணர்வின் உயர்வையோ காட்டுகின்றது. இவர்களைக் கோழைகள் என்று இகழ்வீரோ, வீரர்களென்று பாராட்டுவீரோ" என்று கேட்டோம். அவர் புன்னகை புரிந்தனராய், "மிகவும் இக்கட்டுடையது இக்கேள்வி. ஆதித்திராவிடர் அவ்வழி வரலாகாதென்று தடுக்கின்ற அவ்வூரார் செய்கை, அறியாமையால் நேர்வதேனும், புன்மதியால் நேர்வதேனும், கொடுமையே. அக்கொடுமைக்கு அடங்கி நடத்தல் ஆண்மையாகுமோ, என்ற ஐயம் ஒருபுறம் எழுகின்றது. மற்று, பிறருக்கு வருத்தம் தம்மால் விளையலாகாதென்னும் சிந்தனையால் இவர் செய்த தியாகத்தைப் பாராட்டாமலிருக்க இயலவில்லை. மேலும், யான் கிறிஸ்தவன். "சாதுக்களே கடவுளால் ஆசீர்வதிக்கப்பெற்றவர்" (Blessed are the meek) என்று விளம்பும் எங்கள் வேதம். யான், என் சொல" என்று வாளாவிருந்தனர்.

ஊன்றி நோக்குங்கால் இக்கட்டு யாதும் இதனில் இல்லாமை புலப்படும். உடைமையை உதவுவதன்றி உரிமையையும் வேண்டாத உதாரசீலம் உண்மைக்கடவுளிற்கு அண்மியராக்கும் உயர்வினையுடையது. நம் நந்தனார் அதனாலேயன்றோ தூய்மையிற் சிறந்த தொண்டராயினர். மற்றவர் வருந்தாமல் காக்குமோர் மாண்பே கருதற்கினியது, வாழ்க்கைக்குரியது, பிறவித்துன்பத்தின் பெரும்பகுதியைத் துடைக்க வல்லது. "இவ்வழி நீர் வரலாகாதென்றால் தங்கள் தாழ்மையை நினைத்து அவ்வாதித்திராவிடர்களும் வருந்துவார்களே. ஆதலினால் அவ்வாறு விலக்குதல் பெருமையுஞ் சீலமுமன்று" என்பதை அவ்வூரார்களும் உணர்ந்து அவ்வருத்தத்திற்கு இடமின்றி ஒழுகியிருத்தல் வேண்டும். ஆனால் அவ்வூரார்க்குத் துன்பம் இழைக்கப்படாதென்று எண்ணித் தம் உரிமையை விட்டுத்தரும்வண்ணம் அவ்வாதித்திராவிட மாணவர்களுக்கு மனமானது இலக்கியக்கல்வியால் பண்பட்டிருப்பதுபோல் அவ்வூரார்மனம் பண்பட்டிருக்கவில்லையே. இருக்குமெனின் அவர்களும் விலக்கியிரார். இருதிறத்தும் இன்பமே, யாவர்க்கும் நன்மையே. அந்நிலையை அடைதற்கு முயல்வதொன்றே ஆன்றோர் கடன்.

இலக்கியப் பயிற்சியின் விலையிடற்கரிய நலங்களை மக்கட்தொகுதியும் அதனிற்குத் தலைவர்களாய் விவகரிப்பவர்களும் இன்னும் நன்கு உணர்ந்ததில்லை என்பது எம்குறை. மாண்புடைய மனத்தாலல்லது மற்றவற்றைப் பின்பற்றி வாழ முயல்வதனைத்தும் வீண். முன்னைநாட்களைப்போல் அமைதியும் ஒழுக்கமும் இகலில்லா அன்பும் எங்கெங்குந் தங்கித் திகழ்வதெனின் ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வோர் இலக்கியமெனத் தகுந்ததாகும். சீரும் அசையும் அமைத்துச் சொற்களால் யாத்த பாசுரங்கள் படித்துத் தேர்ந்து பண்பட்டவர் பலராக, அன்னவர் இருப்பதாலேயே மற்றவரும் தளைதட்டின்றி வகையுளியும்பாயாமல் தம் வாழ்க்கையை நடத்தவல்ல நலமுடையவராயினர். தெரிந்தோ தெரியாமலோ, இலக்கியச்சுவையெனும் பொன்னிழையினால் கோக்கப்பெற்றுத் திகழ்ந்தது அக்காலக் குடிவாழ்க்கை. இப்பொழுது அந்நூல் அற்றுவிட்டதாகையால் மணிகளெல்லாம் சிதறியும் புரண்டும் மோதியும் தகர்ந்து மண்ணிற் புதையுண்கின்றன. மறுபடி அந்நூலைச் செய்து கோத்து முடிவதின்றியே மணிகளைத்தான் பக்கத்தில் அடுத்தடுத்து வைத்தாலுமவை மாலையாய் இலங்கல் கூடுமோ.



# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

### 8. வில் வித்தை.

[484-வது பக்கத் தொடர்ச்சி]

#### (iii) வில்லின் அமைதி.

மூங்கிலினால் வில் அமைக்கப்படும். மலையில் நீண்டு வளர்ந்ததும், பெரும்பாரம் அல்லது பெருஞ் சக்தியால் வளைந்தாலும் பிறகு தனதுருவம் முன்போலப் பெறத்தகும் திண்மையுடைய மூங்கிலையே தேர்ந்தெடுத்து வில்லாக்குவர். * இத்தகைய மூங்கிலின் மேல் மந்திகள் குதித்து ஆடுவதை மலைச்சாரலிற் காணலாம்.

இம்மூங்கிலைக் கொண்டுவந்து நாரி கட்டுவதன் முன்னர், வரிகள் † பல சீறிச் சுத்தமாக்குவர். இதன் இடையில் அம்பைநிறுத்தும் தலம் ஏற்படுத்தப்படும். இதுவே குறிவைப்பதற்கு ஒரு சூழ்ச்சியாம். இங்கு நின்று சரமானது சிலையினினுருவி ‡ இலக்குக்குச் சரியாய்ப் பாய்ந்து பகைவனைத் தாக்கும். இவ்வாறு துண்டித்துச் சீர்செய்த வேணுவை வளைத்து நாரி யேற்றுவர். நாரி யேற்றியபின்னரே அம்பு பூட்ட இயலும்.

நாரி அல்லது நாணி யென்னுமது பெரும்பாலும் வலிய நரம்புகளா லாக்கப்படும். புலையர்தம் சேரியினின்று மருதநிலத்தோருக்குக் கோரோஜனமும், வீணை, யாழ் முதலியனவற்றிற்கு நரம்புகளுங் கொடுப்பது பண்டைக்கால வழக்கமாம். இதைச் சேக்கிழார் நந்தனார் சரித்திரத்தில் குறிப்பிடுவதைக் காண்க. வீணைக்கும் யாழுக்கும் ஆதித்திராவிடச் சேரியினின்று வரும் நரம்புகளில் பெரியன வில்லுக்குப் பயன்படும். இந்நரம்பி லொன்றை யெடுத்து வேணுவை வளைத்து இருமுனைகளுக்குஞ் சமீபமாய் அழுத்தமாய்க் கட்டுவர். இவ்வாறு அழுத்தப்பட்ட மூங்கில் பின்னும் சற்று நாணியை இழுப்பதால் வளைக்கப்படின், அது வேகமாய் முன்னுருவம் பெற முயல்வதால் அச்சமயத்தில் அம்பு கோத்திருக்கப்படின், அது நாரியால் உதைக்கப்பட்டு வெகுவேகமாய் வெளியிற் செல்லும்.

நாணி நரம்பினா லாக்கப்படும் காரணம் என்னையோவெனின், நரம்பு எவ்வளவு வலிவுடனிழுக்கப்படினும் நீளாது வருந்தி வளைந்து மறுபடியும் முன்னிருந்த நிலைபெறும். மூங்கிலும், எவ்வழியாலும் நீளாமலும் அறாமலும் உரம்பெற்ற நரம்பும் சேர்ந்து அமைந்த வில்லிலிருந்து எய்யப்படும் கணைகள் * மதில்களையும் பொடியாக்குமென்பர். வில்லை † வட்டமாக வளைத்துச் சரங்களைக் கோத்து எய்வர்.

கையார் வெஞ்சிலை நாணதன் மேற்சரங் கோத்தே
"எய்தாய் மும்மதிலும்மெரியுண்ணவெம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திருமேற் றளியுறையும்
ஐயா வுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே—
சுந்தரர்.

கோட்டைகளைத் தற்காலப் பீரங்கிக் குண்டுகள் பாய்ச்சுவதுபோல் பாய்ச்சி அழிப்பது முற்காலப் போர்முறையே யாம். ஆகாயத்திற் செல்லும் * விமானங்களையும் அடித்து அழிப்பதற்கும் வில்வித்தை பயனாகும்.

ஒரு வில்லானது சரியாகப் பயன்படுமோவெனப் பரிட்சிப்பதையே குணத்தொனிசெய்தல் என்பர். இதனால் விற்கோலின் தன்மை வீரனுக்கு விளங்கும். வில்லானது எவ்வளவு § பெரிதாயிருக்கின்றதோ,

* மூடிய சீவரத்தர் முன்கூறுண்
டேறுதலும் பின்கூறுண்டு
காடி தொடுசமணைக் காய்ந்தா
ரிடம்போலுங் கல்சூழ் வெற்பில்
நீடுயர் வேய்துனியப் பாய்கடுவ
னின்கழை மேனிருந்தஞ் செய்யக்
கூடிய வேடுவர்கள் கூய்விளியாக்
கைமறிக்குங் குறும்ப லாவே. சம்பந்தர்.

† எரியார்வேற் கடற்றானை யிலங்கைக்கோன் றனைவீழ
முரியார்ந்த தடந்தோள்க ளடர்த்துகந்த முதலாளர்
வரியார்வெஞ் சிலைபிடித்து மடவாளை யொருபாகம்
பிரியாத பெருமானார் பெருவேளூர் பிரியாரே.
சம்பந்தர்.

‡ தலையுருவச் சிரமாலை சூடி னான்காண்
டமருலகந் தலைகலனாய்ப் பலிகொள் வான்காண்
அலையுருவச் சுடராழி யாக்கி னான்காண்
அவ்வாழி நெடுமாலுக் கருளி னான்காண்
கொலையுருவக் கூற்றுதைத்த கொள்கை யான்காண்
கூரெரிநீர் மண்ணொடுகாற் றாயி னான்காண்
சிலையுருவச் சரந்துரந்த திறத்தி னான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே.
திருவாரூர் - திருத்தாண்டகம் - 7

* மலைக்கண் மடவா ளொருபாலாய்ப்
பற்றி யுலகம் பலிதேர்வாய்
சிலைகொள் கணையா லெயிலெய்த
செங்கண் விடையாய் தீர்த்தனே
மலைகொ ளருவி பலவாரி
மணியு முத்தும் பொன்னுங்கொண்
டலைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ! சுந்தரர்.

† வில்லை வட்டப் படவாங்கி யவுணர்தம்
வில்லை வட்டம் மதின்மூன்று டன்மாய்த்தவன்
தில்லை வட்டத் திசைகை தொழுவார்வினை
ஒல்லை வட்டங் கடந்தோட லுண்மையே.
கோயில் திருக்குறுந்தொகை - 9.

* வரிந்தவெஞ் சிலையா லந்தரத் தெயிலை
வாட்டிய வகையின ரேனினும்
புரிந்தவர் நாளை புகழ்தக்க வடிமை
போகுநாள் வீழுநா ளாகிப்
பரிந்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகடா மியாதுசொன் னாலும்
பிரிந்திறைப் போதிற் பேர்வதே யாகி
லிவரலா தில்லையே பிரானார். சுந்தரர்.

§ அரும்பெருஞ் சிலைக்கைவேட னாய்விறற் பார்த்தற்கன்று
உரம்பெரி துடைமை காட்டி யொள்ளமர் செய்துமீண்டே
வரம்பெரி துடைய னாக்கி வாளமர் முகத்தின் மன்னுஞ்
சரம்பொலி தூணி யீந்தார் சாய்க்காடு மேவி னாரே.
திருச்சாய்க்காடு - திருநேரிசை-4

அவ்வளவும் அதை வளைக்கும் வீரனது வன்மையைக் காட்டும். மலைபோன்ற வில் என்று உருவகம் செய்யும் புலவோர் மலையென்னும் பொருளுடைய சிலை யென்னும் பெயரை வில்லுக்கு வைத்தார்போலும் இரட்டுற மொழிதல்போல் அப்பர் "சிலை" என்னுஞ் சொல்லைப் பிரயோகிப்பது காண்க:—

சிலைத்தார் திரிபுரங்க ளுயில் வேவச்
 சிலைவளைவித் துமையவளை யஞ்ச நோக்கிக்
கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத் தோடும்
 களிறுரித்த கங்காளா வெங்கள் கோவே
நிலத்தா ரவர்தமக்கே பொறையாய் நாளு
 நில்லாத வுயிரோம்பு நீத னேனுன்
அலுத்தே னடியேனை யஞ்சே லென்னு
 யாவடுதண் டுறையுறையு மமரரேறே.

திருவாவடுதுறை - திருத்தாண்டகம் - 3.

சிலை, பருத்திருப்பதுமன்றி, நீண்டு மிருக்கவேண்டும் பார்த்தனை வர்ணிக்கும்போது நீள்சிலை விசயன் என்பதைக் காண்க:—

ஒன்றிய தவத்து மன்னியுடையனு யுவப்பில் காலம்
நின்றுதங் கழல்க ளேத்து நீள்சிலை விசய னுக்கு
வென்றிகொள் வேடனாகி விரும்பிவெங் கானகத்துச்
சென்றருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.

திருச்சேறை - திருநேரிசை - 3.

பருத்து நீண்டவில்லை யேந்தும் வீரன் அதை உபயோகிக்காத காலங்களில் வலப்பக்கத்தில் தாங்கிச் செல்வான்:—

நிலைவலம் வல்லனல்ல னேர்மையை நினைய மாட்டான்
சிலைவலம் கொண்ட செல்வன் சீரிய கயிலை தன்னைத்
தலைவலங் கருதிப்புக்குத் தாக்கினான் றன்னை யன்று
அலைகுலை யாக்கு வித்தா ரவளிவ ணல்லூ ராரே.

திரு அவளிவணல்லூர் - திருநேரிசை - 4

உபயோகமாகும் காலத்தில் * வில்லின் ஓசையும் அம்பின் ஓசையும் மாறிமாறி அவன் இடது கையில் ஒலிக்கும்.

---

* அரவொலி வில்லொலி யம்பினொலி யடங்கார்புரமூன்றும்
நிரவவல்லார் நிமிர்புன் சடைமே னிரம்பா மதிசூடி
இரவில் புகுந்தென்னெழில் கவர்ந்த விறைவர்க்கிடம்போலும்
பரவவல் லார்வினை பாழ்படுக்கும் பரிதி நியமமே.

சம்பந்தர்.

# மாதவி மாதவம்

[568-வது பக்கத் தொடர்ச்சி.]

## 5. யாழ்க்கருவி இடைநின்று ஊழ்வினையை உறுவித்தமை.

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய வூர்கின்ற ஓதமே!
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே!
ஈர்ந்தண் டுறையே! இதுதகா தென்னீரே?

[முன்னர் நம்மைப் பிரியேனென்று கூறி மகிழ்ந்த நம் தலைவர் இதுபொழுது நம்மின் நீங்கிப் பிரிந்துசெல்கின்றார். அவர் பிரிந்து தேரின் மீதமர்ந்து செல்லுங்கால் உளதாகும் தேர்ச்சுவட்டை யழித்துப் படரும் வெள்ளமே! அழகிய சோலையே! துணையொடுகூடி மகிழ்கின்ற அன்னமே! குளிர்ந்த நீர்த்துறையே! அவர் அங்ஙனம் நம்மைத் தனியே விடுத்துப் பிரிதல் முறையேயோ எனக் கூறி நீவிர் அவரை விலக்காதது ஏனோ?]

"கருணையின்றி யென்னைப் பிரிந்துசென்ற காதலரைப்போல நெய்தலும் என்மீது கருணையின்றி வாயொடுங்கி நின்றது. அது கிடக்கட்டும்; ஏ! வெள்ளமே! யான் உனக்குப் புரிந்த தீமைதான் என்ன? அவர்தான் என்மீது அன்பின்றிப் பிரிந்துசெல்லினும், யானாவது அவர்சென்றவிடத்தை வலிந்துதேடிச்சென்றடையலாமெனின் அதுவும் இயலாதவாறு அவருடைய தேர் சென்ற சுவட்டை யழித்துவிடுகின்றாய்; நீயா அவரை யிடைமறித்து 'இது முறையன்று' எனக் கூறப்போகின்றாய்; கூறமாட்டாய். மற்று, அன்னப்புள்ளாவது அவர் செலவைத் தடுக்குமென மதித்தற்கில்லை; அதுவோ தன் துணையொடு கூடி மகிழும் நிலையில் உளது; அத்தகைய வொன்றிற்கு அவர்பிரிவு ஒருபொருட்டன்று; எனவே அதுவும் "நீர் இங்ஙனம் பிரிதல் தகுதியன்று" எனக் கூறாது. இனி, பொழிலும் துறையுந்தான் உள்ளன; அவை கூறித் தடுத்திருக்கலாம். ஆனால், அவைகளும் என்போன்ற எத்துணையோ தோழியரைப் பெற்றுள்ளன. அங்ஙனமாக அவர்பிரிவும் ஏழையேன்துயரும் அவைகளுக்கு அத்துணைத் துன்பம் பயவா. மற்று, பாவி யொருத்திக்குத்தான் அவர் பிரிவால், யான் பயின்ற கடலும் பொழிலும் துறையும் புள்ளும் இருந்தும் பாழாகத் தோற்றுகின்றன. எளியேனைக் கருதியாவது அவைகள் அவர் செலவைத் தடுக்காது போயினவே" என்று தலைவியொருத்தி பிரிவாற்றாது வேட்கை மிகுதியாற் கூறியதாகப் பாடிய மாதவி, தன் காதலன் மனதில் நன்குதைக்குமாறு "எனது அன்பன் ஊர்ந்துவந்த தேர்ச்சுவட்டை யழிக்கும் வெள்ளமே, பொழிலே, அன்னமே, துறையே நீவிர் 'உன் காதலியின் முன்னிலையிலேயே மற்றொருத்தியைப் புகழ்ந்து பாராட்டலும் அவள் காரணமாக உனது பழைய ஆருயிர்க்காதலியைப் பிரிதலும் முறையல்ல' எனக் கூறமாட்டீரோ? எனக்காகக் கருணைகூர்ந்து அவர் செலவை விலக்குங்கள்" என அறிவுறுத்தும் நேர்மை கன்னெஞ்சுங் கரைந்துருகுந் தரத்த தன்றோ?

நன்னித் திலத்தின் பூணணிந்து
 நஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறும்
 திரையு லாவு கடற்சேர்ப்ப!
புன்னைப் பொதும்பர் மகரத்திண்
 கொடியோ னெய்த புதுப்புண்கள்
என்னைக் காணா வகைமறைத்தால்
 அன்னை காணின் என்செய்கோ?



[நல்ல முத்துக்களாகிய அணியைப்பூண்டு, பவளமாகிய ஆடையுடுத்துச் செந்நெல் விளையுங் கழனிதொறும் திரையுலாவுங் கடற்கரைத் தலைவ! புன்னை மரங்கள் மிக்க சோலையிலே மகரக்கொடியோனாகிய காமன் மலர்வாளி தூவலால் மேன்மேலும் எய்திய துயரை எனக்கு அறிவித்தால் அத்துயர் கழியும் வழி கூற என்னாலியலும். அங்ஙனமன்றி நீரும் எம்செல்வியும் உம்மொடு உயிர்க்குயிராய்ப் பழகும் என்னையே அறியாவகை மறைத்தால், மற்றதனை எம் அன்னை அறியின் என்செய்வேன்? யானும் உம்செயலுக்கு ஒருப்பட்டவள் ஆவேனே!]

இது, தலைமகளொடு பிறரறியாமற் கூடி மகிழ்ந்த தலைவனைப் பார்த்துத் தோழி "ஐய! நீவிர் இங்ஙனம் எம் செல்வியொடு கூடி விளையாடிப் பிரிதலும்; அப்பிரிவால் அவள் வருந்தி உடல் மெலிதலும், ஆக 'தாயே! இங்ஙனம் மெலிதல் எதனால்?' என யான் அவளை வினவின், அவள் 'தோழி, உடல் நலமில்லை' என உண்மையைமறைத்துப் பிறகூறிக்கூறி எத்துணை நாட்கள் இங்ஙனம் நிகழ்தல் இயலும்? யான் அறிதலால் உங்கட்கு வரவல்ல இழுக்கு ஒன்றுமில்லை; மற்று, இது ஊர்முழுதும் பரவி யெம் அன்னைக்கும் எட்டின், அதனால் வரும் ஏதம் பெரிதன்றோ? ஆதலின் விரைவில் பலரறிய மணம்புரிந்துகொள்ளலை ஏற்புடைத்து" எனமொழியும் வகையில் அமைத்து, காதல! நீரிங்ஙனம் மற்றொருத்திமீது வேட்கையுற்று வருந்தும் நிலையை யானறியாவாறு விளையாட்டாக மறைத்து நிற்பினும், இச்செயல் எனது அன்னை யறியின் யான் உமக்கு ஏதோ தவறிழைத்ததாகக் கருதி யென்னை வெறுப்பளே! அன்ப! இஃதறமன்று; ஏழையைக் கைவிடேல்" எனப் பொருள்தருமாறு மாதவி பாடியது, அவள் நாடகக்கணிகையேயாயினும் வேறொருவன்மீது நாட்டமுடையவளல்லள் என்பதை வலியுறுத்தும்.

பறவைபாட் டடங்கினவே
 பகல்செய்வான் மறைந்தனனே
நிறைநிலா நோய்கூர
 நெடுங்கணீ ருகுத்தனவே
துறுமல ரவிழ்குழலாய்!
 துறந்தார்நாட் டுளதாங்கொல்?
மறவையா யென்னுயிர்மேல்
 வந்தவிம் மருண்மாலை.

[நறுமலர் செறிந்த கூந்தலையுடையாய்! பறவைகளின் இன்னிசை யடங்கின; பகல்செய்யும் கதிரவனும் மேற்றிசைச் சென்று மறைந்தான், அந்தோ! யான் நிறுத்தவும் நில்லாதாய் நோய்மிக எனது நெடிய கண்கள் நீருக நிற்கின்றன; தீமையே வடிவாய் எனதுயிரைப் பருகவந்த இந்த மாலைப்போது என்னைப்பிரிந்த தலைவருறையும் நாட்டிலு முளதாமோ? அந்தோ! உளதாயி னவரும் துயருறல் கூடுமே]

இது தலைவனைப் பிரிந்த தலைவி மாலைப்பொழுது கண்டு ஆற்றாது கூறியது. இதனால் "பிரிவு இருவருக்குமே துயர்தருவது" என்பதைக் குறிப்பாக நினைவூட்டுகின்றாள் மாதவி.

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்றா ரொருவர்
நீநல் கென்றே நின்றா ரவர்நம்
மானேர் நோக்கம் மறப்பா ரல்லர்

[கானலை வேலியாகவுடைய உப்பங்கழிவழியே வந்து, "யான் உற்றுள நோய்க்கு நீதான் மருந்து; ஆதலின் அருள் செய்வாய்" எனக் கூறிக்கொண்டே ஒருவர் நின்றார். அங்ஙனம் நின்ற அவர் நம்முடைய மானையொத்த பார்வையை மறப்பா ரல்லர்.]

இது, பிரிவாற்றாது வருந்தும் தலைவியைத் தேற்றும் பொருட்டுச் "செல்வி! நம்மைப்பிரிந்த தலைவர் மெய்ந்நெறி நிற்பவரல்லர்; நிற்பவரெனின் நம்மை மறவார்; மறவாதவர் ஆண்டுத் தனிப்பட உறையார்; நம்மை மறந்துவாழும் வன்மையுடைய ஒருவரை நாம்மட்டும் ஏன் நினைந்து வருந்தல் வேண்டும்? அவரை நினைத்தலே நமக்குத் தகுதியன்று" எனக் கூறிய தோழிக்குத் தலைவி கூறியது. இதனால் "எம் அண்ணல் கோவலன் மற்றொரு நங்கையை 'நீ நல்கென்று' இரந்து நிற்பினும் யாம் உறும் இன்னலை ஏழையேம் தோற்றத்தாலறிந்த அவர் நம்மை மறவார்" என்னும் மாதவியின் நயவுரைக்கு மனமுருகார் யாரேயோ?

பையுணோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை!
மாலை நீயாயின் மணந்தா ரவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை!

[பிரிதலால் நேர்ந்ததுயர் மிகவும், கதிரவன் குடதிசைக்கடலின்கண் சென்றுவீழவும், உலகத்திலுள்ளார் கண்புதைக்கவும் வந்தாய் நீ, மருள்தரும் மாலைப்பொழுதே! அங்ஙனம் வந்த மாலை நீயேயாயின், என்னை மணந்து பிரிந்து சென்ற தலைவர் அவராயின், ஆ! இவ்வுலகம் பாழாதல் திண்ணம்! எனினும், மாலையே, நீ வாழ்!]

காமநோய் "காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும்" ஆதலால், மாலைப்பொழுது வரக்கண்ட தலைவி, "ஆ! கொடிய மாலையே! நல்லார் அல்லாரென்பதை நோக்காது யாவர்க்கும் ஒளியூட்டி வலியளிக்கும் செங்கதிர்ச்செல்வன் மறைய, முன்னரே ஏழையேனை வருத்தாநிற்கும் நோய் பின்னும் அதிகரியா நிற்ப; இவ்வுலகத்தார் உன் கொடுமைக்கஞ்சிக் கண்புதைத்துச் செயலற்றுக் கிடக்கவந்தாய்! இங்ஙனம் நிகழ உண்மையாக வந்தது நீயேயாயின்! இத்துணைக்கும் ஏதுவாக வேறிடத்தே வாழும் அவரே யென் தலைவராயின் நான் இறப்பதுறுதி; அந்தோ! என் இறப்பால் இவ்வுலகமே பாழாமே" எனத் தன் அருந்துயரை வெளிப்படுத்துகின்றாள். "தான் சாவ உலகு கவிழும்" என்னும் முதுமொழிக் கியைய "ஞாலம் நல்கூர்ந்தது" எனக் கூறியது அவளுடைய களங்கமற்ற பேதைநெஞ்சைக் காட்டும். இதனால் மாதவி "கோவலன் தன்னை நீங்கிப்பிரியின் தான் வாழ்வதரிது" என்பதைக் குறிக்கின்றாள்.

தீத்துழைஇ வந்தவிச் செல்லன் மருண்மாலை
தூக்காது துணிந்தவித் துயரெஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்

[மாக் கடல்தெய்வமே! நின் மலரடி வணங்குதும்; தீயைப்பரப்பிவந்த இத்துன்பந்தரும் மாலைப்பொழுது எம்மை வருத்தக்கூடியதென்று ஒரு சிறிதேனுங் கருதாது, எம் தலைவர் மணங்கமழ் பூங்கானலிலே 'நின்னிற் பிரியேன்' என்னும் துணிதற்குக் காரணமாக நல்ல வார்த்தையாற் கூறியவப் பொய்ச்சபதத்தைப் பொறுத்தருள்க.]

இது, தலைவியொடு கூடிமகிழ்ந்த தலைவன், "விரைவில் வந்து உன்னை மணந்துகொள்வேன்" எனக்கூறிப் பிரிந்தானாகப் பின் நெடுநாள் வாராது கழித்து, ஓர் நாள் தலைவிக்கு அருகே ஓர் மறைவிடத்தே வந்து நின்றபோது, தலைவி அதையறிந்தும் அறியாதவள் போன்று கூறியது. இறுதியாக, மாதவி 'என் காதலன் ஆராயாது பாடிய பாக்களால் துயரொன்றே மிகுதியாயினும், மிகப்பெருங்கடல் வடிவாகத் திகழும் இறைவனே! அவர் மொழிந்தன யாவும் என் உள்ளத்தை யளந்தறியும்பொருட்டுக் கூறிய பொய்ச் சொற்களே யாதலின், அதுபொருட்டு அவரைப் பொறுத்தருள்க" என்று தன் ஆருயிரனையாற்குச் சீரியல் பொலியவும் நீரல நீங்கவும் இறைவனை வாழ்த்தி யாழை வைக்கின்றாள்.

இங்ஙனம் மாதவி பாடக்கேட்ட கோவலனுக்கு அவள்மீது ஐயம் பிறந்தது. முழுமதியன்ன திருமுகமுடைய மாதவியின் வேய்புரையும் மெல்லிய தோளினைத் தைவந்துநின்ற தன் கைகளை யப்பாலெடுத்தனன். கோவலன் பாடியவை ஐயம் விளைத்தனவேனும், அதனை வெளியே காட்டாது புன்சிரிப்போடு அவன் பாடிய நெறியேபற்றி மாதவியும் பாடிநிறுத்த, அவற்றைக் கேட்டுணர்ந்த கோவலன் "பெண்களின் உள்ளத்தை யறிதல் யார்க்குமரிது; எனினும் யான் பாடினேனென்று நீயும் அங்ஙனமே பாடிப் பழிக்குப் பழி வாங்கிவிட்டனையா?' என்று கூறி ஒரு சிரிப்புச் சிரித்திருந்தா னென்றால் ஒன்றும் நேர்வதற்கில்லை. பாவம்! பெண்களோடு பழக்கம் பெற்றிருந்தும் அவர்களியல்பை நன்கறியப் பெற்றானல்லனிவ் வேழைக் கோவலன்! "யான் 'கானல் வரி' யென்னும் இசைப் பாவைப் பாட, இவள் வேறொருவன்மீது காதல் கொண்டன்றோ இங்ஙனம் வஞ்சனையுடன் கூடிய பொய்கள் பலவற்றைக் கூட்டிப் பாடியுள்ளாள். ஆ! கள்ளி! உன்னியல்பை யான் இன்று நன்கறிந்தேன்." எனத் தன் மனதொடு கூறிக்கொண்டான். இல்லத்திருந்து மெல்லியலோடு இன்பவுரைபயின்று அன்புடன் போந்த கோவலன் நாடகமகளே யாயினும் தன்னையன்றி மற்றெவ் வாடவரையும் அறியா அச் செல்வியைத் தனியேவிடுத்துத் தான்மட்டும் தன் ஏவலாளர் சூழ்தரத் தன் மனைநோக்கிச் சென்றான். ஆடிப்பாடி மகிழ்ந்து திரிந்த மாதவியின் தோழியரனைவரும் ஊமையர்போன்று வாயடங்கி நின்றனர். மாதவியின் மனநிலையைக் கூறவும் வேண்டுமோ? அவளுக்கு இன்னது செய்வதெனத் தோன்றவில்லை. செயலற்ற சிந்தையளாய்த் தன் ஆருயிர்ச் செல்வனைக் கைவிடுத்துத் தோழியரோடு தேர்மிசை யமர்ந்து தன் இல்லம் புக்காள். நாம் மாதவியிடத்துத் தவறு காண முயலின் ஒன்றே காணவியலும். அஃது தன்னினும் உரிமைபெற்ற கண்ணகியார் தன் கொழுநனைப் பிரிந்து பலவாண்டாக நைந்து வாடுவதை ஒரு சிறிதுங் கருதாததோடு, தன்னை யெங்கே அவன் பிரிந்துவிடுவனோ வென்றஞ்சி அவனைத் தன்வழியில் திருப்பமுயன்றமையே. அந்தோ, கோவலனை நாம் பழிப்பதா? அன்றி, யவன் ஊழ்வினை வந்து இங்ஙனே உற்றதென அமைவதா?

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[575-வது பக்கத் தொடர்ச்சி]

### 1-ம் பத்து 9-ம் பதிகம்.

1-ம் பாசுரம்

இவையு மவையு முவையு மிவரு மவரு முவரும்
யவையும் யவரும் தன்னுள்ளே யாகியு மாக்கியுங் காக்கும்
அவையுள் தனிமுத லெம்மான் கண்ணபி ரானென் னமுதம்
சுவையன் திருவின் மணாள னென்னுடைச் சூழ லுளானே.

அரும்பதம்:—இவையும் - சமீப வஸ்துக்களும், அவையும் - தூரத்திலுள்ள வஸ்துக்களும், உவையும்-நடுப்பிரதேசத்திலுள்ள வஸ்துக்களும், இவரும் அவரும் உவரும்- இவர்கள் அவர்கள் நடுப்பிரதேசத்திலுள்ளவர்கள், அதாவது ஸர்வ அசேதநமாயும் ஸர்வ சேதநர்களாயும் உள்ள, யவையும் யவரும் - எல்லாமும் யாவரும், தன்னுள்ளே ஆகியும் - தன்னுள்ளே அடங்கும்படி பண்ணியும், ஆக்கியும்-இவைகளெல்லாம் படைத்தும், காக்கும் - ரக்ஷிக்குமவன், அவையுள் தனிமுதல்-அந்தச் சேதநர்களுக்கெல்லாம் ஒரே காரணபூதன், அதாவது அவர்களுக்கெல்லாம் பிரவர்த்தி நிவர்த்திகளுக்கு முக்கிய ஹேதுவான, எம்மான் - என் ஸ்வாமி, கண்ணபிரான் - கிருஷ்ண பகவானாகிய பிரபு, என்னமுதம் - எனக்கு நிரதிசய உகப்புக்குக் காரணபூதன், சுவையன் - எனது கலவியில் அத்தியந்த ரஸிகன்; இப்படிப்பட்டவன் திருவின் மணவாளன் - இலக்குமிக்குப் பிரிய புருஷன்; என்னுடைய சுழல் - என்னுடைய ஸமீபத்தில் உளான்-என்னுடன் கலப்புநிமித்தம் வந்து புகுந்து கொண்டிருக்கிறான்.

குறிப்பு:-சென்றதசகத்தில் "என் மெய் கலந்தான்' என்று சொன்னசங்கதியை அதன் பிரகாரங்களோடு விசதமாய் இத்தசகத்தில் பேசுகிறார். யாம் பல இடங்களில் குறித்திருக்கிறபடி ஆழ்வார் இங்கு, பகவான் உலகிலுள்ள ஸர்வ சேதந அசேதந வஸ்துக்களுக்கும் காரணபூதனாய் நிற்கிறவன்; மஹா லட்சுமிக்குப் பிரியனாயிருப்பவன்; என்னுடன் கலந்து பறிமாறுகைக்காக என் சமீபத்தில் வந்து உள்ளான். இது என்ன ஆச்சரியம்; இது என்ன உண்மையான அன்பு; என்று வியப்புறுகிறார். அவனது கலவியின் விவரங்களைப் பின்பாசுரங்களில் எடுத்துக் கூறுகிறார்.

---

2-ம் பாசுரம்.

சூழல் பலபல வல்லான் தொல்லையங் காலத் துலகை
கேழலொன் றாகி யிடந்த கேசவ னென்னுடை யம்மான்
வேழமருப்பை யொசித்தான் விண்ணவர்க் கெண்ணலரியான்
ஆழ நெடுங்கடல் சேர்ந்தா னவனென் னருக லிலானே.

சூழல் பலபல வல்லான் - பலவிதமான அவதாரங்களை எடுத்து என்போன்ற பக்தர்களை வசீகரிக்க வல்லன்; ஆதிகாலத்து இவ்வுலகம் ஜலார்ணவத்தில் முழுகிக்கிடக்க ஒரு வராஹமாய் அவதரித்துத் தன்னுடைய பிறைபோன்ற கோட்டிலே பூமியை எடுத்து உத்தரித்தான்; கேசவன் - அந்த வராஹ அவதாரத்தில் தண்ணீரில் நனைந்த நீண்ட ரோமங்களைத் தனக்கு அழகான ஆபரணமாய்க் கொண்டவன். கம்ஸன் ஏவிய குவலயாபீடம் என்கிற ராக்ஷஸனை யானையை அதன் தந்தங்களைக்கொண்டே அடித்து ஒழித்தவன் தேவதைகளுக்கும் அறிய எட்டாதவன். க்ஷீராப்தியில் எவர்களும் நெருங்க வொண்ணாமல் கிடந்து கண்வளருகிறவன். என் சமீபத்தில் வந்து என் கலவிக்குக் காத்திருக்கின்றான். என்ன அன்பு; யான்பெற்ற பாக்கியம் என்னே! என்று பின்னரும் அவன் அருமையைப்பேசி அநுபவிக்கிறார்.

---

3-ம் பாசுரம்.

அருகலி லாய பெருஞ்சீ ரமரர்க ளாதி முதல்வன்
கருகிய நீலநன் மேனி வண்ணன் செந்தாமரைக் கண்ணன்
பொருசிறைப் புள்ளுவந் தேறும் பூமக ளார்தனிக் கேள்வன்
ஒருகதி யின்சுவை தந்திட் டொழிவில னென்னோ டுடனே.

அருகல் - நாசம் குற்றம் கேடு குறைவு முதலான தாழ்ந்தகுணங்கள், இல் - இல்லாத, ஆய - எப்பொழுதும் உள்ள இருக்கையாலே நித்தியமாய, பெருஞ்சீர்- பெருமைபொருந்திய கல்லியாணகுணங்கள் உள்ள எம்பெருமான், அமரர்கள் ஆதி முதல்வன் - நித்திய ஸூரிகளுக்கு நிர்வாஹகன், கருகிய மேகவர்ண சாமளனாய், நீல நன்மேனி வண்ணன்-நீலமணிபோல் நல்ல வர்ணத்தையுடையவன், செந்தாமரைக் கண்ணன், பொரு - செறிந்த, அதாவது இறகுகள் நெருங்கி அடர்ந்த, புள் - கெருடபகவானை, உவந்து ஏறும் - சந்தோஷித்து ஏகாசமாய்த் தோளில் ஏறும், பூமகளார் - தாமரை மலரில் வைகும் மஹா லட்சுமியின், தனி - ஒப்பற்ற, கேள்வன் - பிரிய நாயகன், ஒரு கதியின் - ஒரு வழியாயுள்ள, இன்சுவை - இனிமையான கலப்பை, தந்திட்டு - கொடுத்ததன்பின்னர், ஒழிவிலன் - அதே வண்ணம் ரசாநுபவத்தைக் கொடுப்பதில் தவறாதவன்.

குறிப்பு:—ஹேயகுண ரஹிதன் — அதாவது, விஷ்ணுபுராணத்தில் நன்கு செப்பியிருப்பதுபோல "அபக்ஷய விநாசாப்பியாம் பரிணாமார்த்தி ஜந்மபி" என்கிற, நாசம் மாறுதல் விருத்தி குறைதல் பொருள்வேறுபடுதல், சிலதாயிருந்து மற்றொரு காலம் மறைதல், முதலான குற்றங்கள் இல்லாத மஹாபுருஷன் எம்பெருமான் என்கிறார். பொரு—கெருடனுக்கு, பகவான் ஆரூடமாய் எழுந்தருளப் போகிறார் என்ற அளவிலே சந்தோஷத்தால் சிறகுகள் புளகாங்கிதமாய் விர்த்தியடைகின்றனவென்பது தாத்பரியம். ஒரு கதியின் சுவை-இது வரையில் ஆழ்வார் அடைந்த கலப்பு மானச ரூபமாக ஒருவகைப்பட்டிருக்க அது இப்போது அடிதொட்டு அம்மஹானின் உடம்பில் கலக்க, பகவான் கிருஷ்ணாவதாரச் சிறுகுழவியாய் அவரது தேஹத்தில் இடுப்பின் பக்கத்திலும் தோள்களிலும் தலையிலும் ஏறி வீற்றிருக்கும் வெகு ரஸமான பிரகாரங்களைச் சொல்லி அநுபவிக்கத் தொடங்குகின்றபடியால் முன்கலந்த கலவியின் ரசம் ஆழ்வாருக்குமே இளைத்துக்காட்டுகிறது.

---

4-ம் பாசுரம்.

உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மக ளாயர்
மடமகள் என்றிவர் மூவர் ஆளு முலகமும் மூன்றே [ன்
உடனவை யொக்க விழுங்கி யாலிலையிற் சேர்ந்தவ னெம்மா
கடல்மலிமாயப் பெருமான் கண்ணனென் னொக்கலையானே.

அவதாரிகை:—யசோதைப் பிராட்டியின் இடுப்பில் கிருஷ்ணன் எவ்வண்ணம் களிகூர்ந்து ஏறிக்கொண்டானோ அவ்வண்ணம் தன் ஒக்கலையிலும் ஏறி விளையாடினதை அதிசயித்துக் கூறுகிறார்.

பொழிப்புரை:—மஹா இலட்சுமிப் பிராட்டியாரும் ஸ்ரீ பூமிப்பிராட்டியாரும் நப்பின்னைப் பிராட்டியாரும் எம்பெருமானுக்கு திவ்விய மஹிஷிகள். இவர்கள் மூவர்கள் ஆட்சியில் மூன்று லோகங்களுமகப்பட்டன. அந்த மூன்று லோகங்களையும் ஒக்கக்கூட்டி யுகத்தின்முடிவில் விழுங்கி விழுங்கி மஹாஜலார்ணவத்தில் வடபத்திரசயனனாய்ச் சிறு குழவி வடிவெடுத்துத் தூங்குகின்ற பெருங் கடலைக்காட்டிலும் வெகு விஸ்தாரமான ஆச்சரிய சக்தியுள்ளவனானவன், என்ன அதிசயம், என் ஒக்கலையில் ஏறி அருளாநின்றான்.

குறிப்பு:—மூன்று லோகங்கள் - புராணங்களில் கூறியபடி (1) கிருதகம் (2) அகிருதகம் (3) கிருதாகிருதகம் என்று பொருள்கொள்ளவேண்டும்! பூமி பாதாளம் சுவர்க்கம் என்ற மூன்று லோகங்களன்றியில் எல்லா அண்டங்களும் யுகப்பிரளயத்தில் அகப்படுகின்றன. "கடலினும் காதல் பெரிது" என்ற பிரயோகங்களைக் காண்க.

---

5-ம் பாசுரம்.

ஒக்கலை வைத்து முலைப்பா லுண்ணென் றுதந்திட வாங்கிச்
செக்கஞ் செகவன் றவள்பா லுயிர்செக வுண்ட பெருமான்
நக்க பிரானோ டயனு மிந்திர னும்முத லாக
ஒக்கவுந் தோற்றிய வீசன் மாயனென் னெஞ்சி னுளானே.

பதவுரை:—செக்கம் - நசிப்பிக்க வேணுமென்ற பூதனையின் நினைவு. செக-கெட. நக்கபிரான் - நக்கமாய்ச் சந்தோஷத்தாலே பரவசமாய் ஆடும் பரமசிவப் பெருமான், ஒக்கவும்தோற்றி -பிரம்மா சிவபெருமான் இந்திரன் முதலான சகல சேதநா சேதநங்களையும் தோற்றுவித்து, (படைத்து), என்னெஞ்சி னுள்ளானே - "மனதில் நின்றான்" என்றபொருள் கொள்ள ஒவ்வாது. பிரகரணத்துக்கு ஒக்கலை - அதாவது இடுப்பிலிருந்த அந்த இருப்பு ஆழ்வாருக்கு மனம் ஆற்றினவாறே அம்மஹானின் மார்போடு பகவான் அணைந்தான் என்று பொருள் கொள்ளல் உசிதம்.

பொழிப்புரை:—பிரம்மாமுதல் ஸர்வ ஜகத்துக்கும் சிருஷ்டிகர்த்தாவாய் அந்த ஸர்வத்தையும் நடத்தும் கடவுளாய், ஆச்சரிய பூதனாய், விரோதி நிரஸன ஸ்வபாவனுமாயிருந்த எம்பெருமான் என் ஒக்கலையிலிருந்த இருப்பு எனக்கு ஆறவே மார்போடு அணைந்து எழுந்தருளினான்"—ஆறுயிரப்படி.

# தமிழ்ப் பாடம் 131.

[570-வது பக்கத் தொடர்ச்சி.]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

இவனழற் கடவுண்மற் றிவன்வெங் கூற்றுவ
னுவனெறி கடற்கிறை யொழிந்து நின்றயான்
கவனவாம் பரியுள முணருங் காவல
வவிரொளி மணிமுடி யமரர் வேந்தனே. 15.

(உரை). கவன வாம் பரி - வேகத்துடன் தாவுகின்ற குதிரைகளினுடைய, உளம் உணரும் காவல - உள்ளத்தை உணர்ந்து செலுத்தும் வேந்தனே, இவன் அழல் கடவுள் - இவன் அக்னிதேவன், (மற்று) இவன் வெம் கூற்றுவன் - இவன் கொடிய எமதர்மராஜன், உவன் - மற்றவன், எறிகடல்கு இறை - எறிகின்ற அலையை உடைய கடலுக்குத் தலைவனான வருணன்; ஒழிந்து - மேலே கூறியவர்கள் தவிர, நிற்கும் யான் - நிற்கின்ற நான், அவிர் - வீசுகின்ற, ஒளி - ஒளியினோடு கூடிய, மணிமுடி - இரத்தினங்கள் இழைத்த கிரீடத்தை உடைய, அமரர் - தேவர்களுக்கு, வேந்தனே - தலைவனான தேவேந்திரனாவேன். (என்று இந்திரன் தன்னையும் மற்றத் தேவர்களையும் அறிமுகம் செய்துவைத்தனன்.)

குறிப்பு:—போகும் என்பது போம் என்றும், ஆகும் என்பது ஆம் என்றும் ஆவதுபோல் இங்கு வாவும் என்பது வாம் என இடைகுறைந்து நின்றது.

---

உன்னுழை வேண்டுவ தொன்றுண் டாங்கது
பின்னர்யாங் கூறுது மென்று பெட்புறும்
பொன்னகர்க் கிறையவ னிருந்த போதினின்
மன்னவ னவரடி வணங்கி னனரோ. 16.

(உரை). 'உன் உழை - உன்னிடத்தில், வேண்டுவது ஒன்று உண்டு - எங்களால் வேண்டப்படுவது ஒன்று இருக்கின்றது. (ஆங்கு - அசை) அது - அது என்ன வென்பதை, யாம் பின்னர் கூறுதும் - நாங்கள் பிறகு கூறுவோம்; என்று - என்று கூறி, பெட்பு உறும் - ஆசைகொண்ட, பொன்நகர்க்கு இறைஅவன் - பொன்னுலகிற்குத் தலைவனான இந்திரன், இருந்த போதினில் - காத்து இருந்தபோது, மன்னவன் - நளசக்ரவர்த்தி, அவர் அடி வணங்கினன் - அந்த நான்கு தேவர்களுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினன். (அரோ - அசை).

விரிவுரை:—தேவர்களே வந்து தன்னிடத்தில் ஒரு வரம் இரக்கின்றனரே என்னும் இறுமாந்த எண்ணம் சிறிதுமின்றி, 'எளியேனை வந்து இவர் ஒன்று கேட்கவோ' என்னும் அடக்கத்துடன் அவரடிகளை வணங்கிய பெருந்தகை நளன்.

குறிப்பு:—பின்னர்+யாம்=பின்னர் யாம் - நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்திருக்க, வருமொழி முதலில் யகரம் வரின் இகரம் தோன்றி, பின்னரியாம் எனப்புணரலாம். ஆயினும் அவ்வாறு இகரம்தோன்றாமல் பின்னர்யாம் என இயல்பிற் புணர்வது பிழையன்று.

---

உண்ணெகிழ்ந் திறைஞ்சிய வுலங்கொ டோளினன்
விண்ணுல காள்பவர்க் கரிய மேம்பொருள்
மண்ணுல காள்பவர மாட்டு வைகுமோ
வெண்ணின்மற் றிவருளம் யாவ தாங்கொலோ. 17

(உரை). உள் நெகிழ்ந்து - உள்ளம் உருகி, இறைஞ்சிய - வணங்கிய, உலம் கொள் - மலையை ஒத்த, தோளினன் - தோள்களை உடைய நளமகாராஜன், விண் உலகு ஆள்பவர்க்கு - தேவலோகத்தை ஆள்கின்றவர்களுக்கு, அரிய மேம்பொருள் - அகப்படுவதற்கு அரியதான சிறந்த பொருள், மண்ணுலகு ஆள்பவர் மாட்டு-மண் உலகத்தை ஆள்பவரிடத்தில், வைகுமோ - இருக்குமோ! (இருப்பது இயலாதாகையால்) எண்ணில் - எண்ணுமிடத்து, (மற்று - அசை) இவர் உளம் யாவது ஆம் கொலோ - இவர்களுடைய கருத்து யாவதா யிருக்குமோ எனக்குத் தெரியவில்லையே! (என்று நளன் தனக்குள்ளே சிந்தித்துக் கொண்டான்).

குறிப்பு:—உலம்கொள் என்பதில், கொள் என்பது உவம உருபாக நிற்கின்றது. அல்லது, உலத்தினுடைய தன்மையைக்கொண்ட, அதாவது, உலம் போன்ற என்று பொருள்படுத்த வேண்டும்.

---

குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றென
மறுத்தலே கேட்டபின் வழங்க லாதலிற்
பெறற்கரு மாவியும் பெட்பி னீகுவன்
றிறப்பட விவருளந் தெரிந்த தில்லையால். 18.

(உரை). குறிப்பு அறிந்து - மற்றவர்களுடைய குறிப்பைத்தெரிந்துகொண்டு அவர் கேட்காமுன்னம், ஈதலே - கொடுப்பதே, கொடை - கொடை எனத் தகுந்ததாகும். மற்று - அவ்வாறின்றி, கேட்டபின் வழங்கல் - கொடு என்று அவர் கேட்டபிறகு கொடுப்பது, இன்று என மறுத்தலே - கொடேன் என்று மறுப்பதற்கே சமானமாகும். ஆதலின் - ஆதலால், பெறற்கு அரும் ஆவியும் - பெறுவதற்கு அருமையான எனது உயிரையும், பெட்பின் ஈகுவன் - அவர்களுக்கு வேண்டியதாயின் நான் விருப்பத்துடன் கொடுத்துவிடுவேன். (ஆனாலோ) திறம்பட - நிச்சயமாக, இவர் உளம் - இவர்களுடைய கருத்து இன்னதென்று, தெரிந்தது இல்லை - எனக்குத் தெரியவில்லையே! (ஆல் - அசை) (என்று நளன் தனக்குள் எண்ணிக்கொள்கின்றான்.)

விரிவுரை:—'இலன் என்னும் எவ்வம்உரையாமை ஈதல் குலமுடையார் கண்ணே யுள' என்னும் குறளின் கருத்தைத் தழுவிக் கொடையின் இலக்கணம் இங்குக் கூறப்பெற்றிருக்கின்றது. 'ஆவிற்கு நீரென்று இரப்பினும், நாவிற்கு இரவின் இளிவந்தது இல்' என்பது பொய்யாமொழி யாதலால், தனக்கு இது இல்லை என்னும் பரிபவச் சொல்லால் ஒருவன் மனமும் மானமும் அழிந்தபின் அவனுக்குக் கொடுத்தாலும், முன்னுற்ற பரிபவத்தில் பின்பெற்ற கொடையின் உவகையும் கரைந்து அழிந்துபோம். ஆகலின் தலைவள்ளலாய இந் நளன், கேட்டபின் ஒன்றைக் கொடுத்தல் கொடாதுமறுத்தலையே நிகர்க்கும் என்பதைத் தெளிந்திருந்தனன். இதனை, "ஈயென விரத்த லிழிந் தன்று, அதனெதிர் ஈயேனென்றல் அதனினு மிழிந்தன்று, கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று" என்று கழைதின்யானையார் (புறநானூறு 204) மறக்கலாகாச் சொன்னயம் வாய்ந்த செய்யுளால் இனிதின் பாடுகின்றார்.



அவ்வண்ணம் தேவர் கேளாமுன்னம் கொள்ளெனத் தன்னுயிரையும் கொடுத்தற்கு இசைந்துளானாயினும் அவர்க்கு வேண்டியது யாதெனத் தெரியாமையால் கொடையினைத் தாழ்க்கவேண்டியிருப்பது பற்றி நளன் மனம் வருந்துகின்றான்.

குறிப்பு:—ஆவியும். இதனில் உள்ள உம்மை உயர்வுசிறப்புப் பொருளது (வால்யூம் 1 பக்கம் 489).

ஈதலே - இதனில் உள்ள ஏகாரம் பிரிநிலைப்பொருளது. (1-449). மறுத்தலே - இதனில் உள்ள ஏகாரம் தேற்றப் பொருளது (1-449).

## இலக்கணம்.

B. யகர ரகர ழகர மெய்யீறுகள் (தொடர்ச்சி)

III இவ்வீறுகளும்+இடையின மெய்களும்.

இடையின மெய்களில் யகரம் வகரம் என்னும் இரண்டுமே மொழிக்குமுதலில் வரக் கூடியன. இவ்விரண்டிற்கும் தனித்தனியாக விதிகள் கூறவேண்டியது அவசியமாகின்றது.

(a) நிலைமொழி யிறுதியில் யகர ரகர ழகர மெய்கள் நிற்க, வருமொழி முதலில் வரும் வகரமெய் எல்லாத் தொடர்களிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

பாய்+வாங்கினான்=பாய்வாங்கினான்
நெய்+விலை=நெய்விலை
நகர்+விட்டான்=நகர்விட்டான்
நகர்+வீழ்ந்தது=நகர்வீழ்ந்தது
கூழ்+வெந்தது=கூழ்வெந்தது
ஊழ்+வினை=ஊழ்வினை

(b) நிலைமொழி யிறுதியில் ரகர மெய்யேனும் ழகர மெய்யேனும் இருக்க வருமொழிமுதல் யகரம் வருமானால் எல்லாத் தொடர்களிலும் இகரம் தோன்றி, அவ்விகரம் நிலைமொழி யிறுதிமெய்யில் ஏறிப் புணரினும் புணரலாம்; அல்லது யாதும்விகாரமின்றி இயல்பாகவும் புணரலாம். இருவழியும் பிழையில்லை.

நகர்+யாது=நகரியாது, நகர்யாது
தேர்+யாப்பு=தேரியாப்பு, தேர்யாப்பு
(யாப்பு=கட்டுதல்)
ஊழ்+யாது=ஊழியாது, ஊழ்யாது
இதழ்+யாணர்=இதழியாணர், இதழ்யாணர்
(யாணர் - அழகு)

(c) நிலைமொழி யிறுதியில் தனிக்குறிலைச் சார்ந்த யகரமெய் இருக்க வருமொழிமுதலில் யகரமெய் வருமாயின், எல்லாத் தொடர்களிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

செய்+யாகம்=செய்யாகம்.
பொய்+யானை=பொய்யானை.
நெய்+யாது=நெய்யாது.
மெய்+யாப்பு=மெய்யாப்பு. (யாப்பு=உறுதி)

(d) நிலைமொழி யிறுதியில் நெடிலொடு சார்ந்த யகரமெய் இருக்க வருமொழிமுதலில் யகரம் வருமானால் எல்லாத் தொடர்களிலும் அந் நிலைமொழியிறுதி யகரமெய் கெட்டுவிடும்.

நாய்+யாது=நாயாது.
(நீர்)பாய்+யமுனை=பாயமுனை
(பாய்கின்ற யமுனை).
போகாய்+யாதவ=போகாயாதவ.

குறிப்பு:—இவ்விதிகள் முன்னர்(3—534) வேறோர் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

IV சிற்சில சொற்களுக்குரிய சிறப்புவிதி.

(1) தமிழ் என்னுஞ் சொல்லிற்குச் சிறப்புவிதி.

தமிழ் என்னுஞ் சொல்லிற்குப்பின் வருமொழி முதலில் வல்லினம் மெல்லினம் இடையினம் உயிர், ஆகிய இந்நான்கு இனத்தில் எவ்வெழுத்துவரினும், அகரச்சாரியையும் பெற்றுப் புணரும்.

தமிழ்+அரசர்=தமிழ்+அ+அரசர்=தமிழ அரசர்
(பிறகு இது உடன்படுமெய் பெற்றுத் தமிழவரசர் என ஆகும்)
தமிழ்+குலம்=தமிழ்+அ+குலம்= தமிழ+குலம்
=தமிழக்குலம்.
தமிழ்+நம்பி=தமிழ்+அ+நம்பி=தமிழநம்பி.
தமிழ்+வீரன்=தமிழ்+அ+வீரன்=தமிழவீரன்.

குறிப்பு:—இவ்வாறு அகரச்சாரியை பெறுவதை ஆறும்வேற்றுமைத் தொகையிலும், உருபும்பயனும் உடன்தொக்க வேற்றுமைத் தொகைகளிலும் பண்புத்தொகையிலுமே காணலாம். நன்னூல் முதலிய இலக்கண நூல்களின் உரையில், தமிழப்பிள்ளை, தமிழவரசன் முதலிய இத்தொடர்களைத் தமிழ்+பிள்ளை என்றும், தமிழ்+அரசன் என்றும் பிரித்து, அவை அகரச்சாரியை பெற்றுப் புணர்ந்தனவென்று காட்டுவாரேனும், இவ்விதி சிறிது ஐயத்திற்கிடந்தருகின்றது. தமிழ + மொழி, என்பது தமிழமொழி எனப் பண்புத்தொகையில் ஆவதில்லை, தமிழ்மொழியென்றே ஆகும். தமிழ்+இன்பம், என்பது தமிழின்பம் அல்லது தமிழின் இன்பம் என ஆறும் வேற்றுமைத்தொகையில் ஆகின்றதேயன்றி, தமிழஇன்பம் என ஆவதில்லை. தமிழ் + புத்தகம் = தமிழ்ப் புத்தகம் என்றாகுமன்றி உருபும் பயனும் உடன்தொக்க வேற்றுமைத் தொகையிலும் தமிழப்புத்தகம் என ஆவதில்லை ஆதலின், தமிழ் என்பது அப்பாஷையைக் குறித்து நிற்கும் எவ்விடத்தும் அகரச்சாரியை பெற்றுப் புணரக் காண்கிலம். எனின், வணிகர் + வீதி = வணிகவீதி, அந்தணர் + கன்னி = அந்தணக் கன்னி, என்று சாதியைக் குறித்த உயர்திணைப்பெயர்கள் ஈறு கெடுவதுபோல, 'சில விகாரமாம் உயர்திணை' என்ற விதிக்கிணங்கி, தமிழர் + குடி = தமிழக்குடி என்றும், தமிழர்+அரசர்=தமிழவரசர் என்றும் புணர்ந்திருப்பினும் இருக்கலாம். அகரச்சாரியை பெற்றுப் புணர்ந்தனபோல் வழங்குகின்ற தொடர்களெல்லாம் 'தமிழர்' என்று நிலைமொழியைப் பிரிக்கக்கூடியனவாயிருக்கின்றன. தமிழ்ப்பாடம், தமிழ்க்கல்வி, தமிழ்நயம், தமிழோதினான் என அகரச்சாரியை பெறாமல் புணரும் தொடர்களிலெல்லாம் நிலைமொழி பாஷைப் பெயராகிய "தமிழ்" என்றே இருக்கவேண்டியதாகின்றது.

(2) கீழ் என்னுஞ் சொல்லிற்குச் சிறப்புவிதி.

கீழ் என்னுஞ் சொல் நிலைமொழியாயிருக்குமாயின் வருமொழிமுதலில் நிற்கும் வல்லினமெய் மிகுந்து புணரவேண்டிய தொடர்களில் அவ்வாறு மிகுந்து புணர்வதோடு மிகாமலும் புணரலாம்:—

கீழ்+குலம்=கீழ்குலம், கீழ்க்குலம்.
கீழ்+சாதி=கீழ்சாதி, கீழ்ச்சாதி.

கீழ் என்பதன்முன் வல்லினமெய் மிகாமல் இயல்பாய்ப் புணர்வதே சிறப்புடைத்து.

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[572-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை (Behaviour).

உணர்வுப் பழக்கம்:-குளவியானது கூட்டினின்றும் புறப்பட்டுப் போகையில் தன் கூட்டைச் சுற்றியுள்ள பொருள்களை அடையாளமாக உணர்ந்துசென்று பின் அக்குறிகளை நாடிவந்து தன் கூட்டை உணர்கின்றது. இடவாராய்ச்சி செய்கின்றது. தன் கூட்டையறிவது அந்தக் குளவிக்குப் பழக்கமாகிவிடுகின்றது. இவ்வாறு அடையாளங்களைக்கொண்டு வேண்டிய பொருளை அடைதல் விலங்குகளில் கீழ்நிலையிலுள்ளவற்றினிடையும் காணப்படுகின்றது. இரண்டு அறைகளுள்ள பெட்டிஒன்றை வெள்ளெலி ஒன்றினெதிரில் வைக்கின்றேன். வலப்புறம் உள்ள அறையில் அது வேண்டும் தீனியை வைக்கிறேன். அந்தத் தீனி வைத்த அறையில் வெளிப்புறத்தில் பழுப்பு இலை ஒன்றை ஒட்டுகின்றேன். வெள்ளெலியானது தேடிப் பார்த்துத் தீனியை யடைகிறது. மறுமுறை தீனியை இடப்புற அறையில் வைத்து அப் பழுப்பு இலையையும் வலப்புறத்தினின்று எடுத்து இடப்புறத்தில் ஒட்டுகின்றேன். பழக்கத்தால் வெள்ளெலி வலப்புறம் செல்கிறது; பின்னர் இடப்புறம் சென்று தீனியை அடைகின்றது. இவ்வாறே மாற்றிமாற்றித் தீனியை வைத்துத் தீனிவைக்கும் அறைக்கு வெளியில் பழுப்பு இலையை ஒட்டவைத்துப் பழக்குகின்றேன். பசியாய் இருக்கும்போது பழக்கினால்தான் தீனிமேல் நாட்டமாய் அறையைத் தேடியடையும். இவ்வாறு நாளுக்கு இருபதுமுறை மாற்றிமாற்றிப் பழுப்பிலையுள்ள அறையில் தீனியை வைத்துப் பழக்கினால் முப்பதாம் நாள் தேடியலையாது நேரே பழுப்பிலை ஒட்டிய அறையை அடைகின்றது. பழுப்பிலையே தீனியறையின் அடையாளம் என உணர்கின்றது. இதைவிட விரைவாகப் பயிற்றவேண்டுமானால், தவறிப்போகுந்தோறும் அதன் உடலை வாட்டுதல் வேண்டும்; தகுதியுணருந்தோறும் மகிழ்ச்சியூட்டுதல் வேண்டும். பழுப்பிலை யறையை உணர்ந்தபோது தீனி கொடுக்கின்றேன். மற்றோர் அறையில் புகும்போது மின்னோட்டம் கொண்டு தாக்குகின்றேன். இவ்வாறு செய்தால் விரைவில் பழுப்பிலை அறையே தீனியறை என வுணர்ந்து பழுப்பிலையறையை நாடியே செல்கின்றது. வேறோர் அறையைத் திரும்பியும் பார்ப்பதில்லை. இங்கே ஏதேனும் ஓர் அறையைக் கண்டால் உள்ளே புகுதல் இயற்கை எதிரூன்றல்; பழுப்பிலை ஒட்டிய அறையைக்கண்டு உட்புகுதல் செயற்கையெதிரூன்றல்.

வழியுணர்தல்:—ஓர் அடையாளத்தை யறிவதோடு போகின்றவழி முழுதையும் உணர்ந்து பறந்து வருகிறது குளவி. சிக்கலறைப்பெட்டி (Maze) ஒன்று செய்கின்றேன். இடையில் தீனியை வைக்கின்றேன். பல அறைகளும் சந்துகளும் முட்டுச்சந்துகளும் குறுக்கும் நெடுக்குமாக இருக்கின்றன. ஓர் எலியை உள்விடுகின்றேன். அதற்கோ பசி மிகுதியாய் இருத்தலின் தீனியின் நாற்றத்தால் இழுக்கப்பட்டு உள் செல்கின்றது. பல சந்துகள் வழியாக அலைந்து திரிகின்றது. முட்டுச்சந்துகளில் போய் முட்டிக்கொண்டு பின் வந்தவழியே திரும்பி வேறு வழியிற் செல்கின்றது. இவ்வாறு தட்டிமுட்டித் தீனியை அடைகின்றது. மறபடியும் எடுத்து வெளியே விட்டால் முன்போல உள்ளேபோக முயல்கின்றது. இம்முறை முட்டுச்சந்துகளில் போவது குறைகிறது. பழகும்போது ஒருமுறைக்கொருமுறை வேண்டாத வீண் இயக்கங்கள் குறைகின்றன. பழகியபின் முட்டுச்சந்துகளில் அகப்படாது நேரே தீனியை அடையக் கற்றுக்கொள்கின்றது. வேண்டாத எதிரூன்றல்கள் குறைவதோடு பலவழிகளும் அதன் மனதில் ஒன்றாக இயைந்துவிடுகின்றன. கண்ணால் பார்த்து அறிந்து கொள்கிறது எனச் சொல்வதற்கில்லை. உற்றறிந்தே வழியையுணர்கிறது. ஒவ்வோர் சந்திலும் சென்று அச் சந்து முடிந்ததும் எப்படித் திரும்புவது என எண்ணுவதில்லை. முன்னாலே, 'வலதுபுறமாகத் திரும்பவேண்டும். பத்தடி எடுத்து வைக்கவேண்டும். பின் இடப்புறம்திரும்பி ஐந்தடி எடுத்துவைக்கவேண்டும். உடலைக் குறுக்கி வலப்புறம் திரும்பி ஓரடி எடுத்து வைத்து இடப்புறம் திரும்பிப் போதல்வேண்டும். என்று அவ் வழிமுழுதும் பதிந்துவிடுகின்றது. ஒரு சந்தின் முடிவிற் சென்றதும் அதன் கால்களும் உடலும் திரும்பவேண்டிய சந்தின் வழியாகத் திரும்புகின்றன. சிக்கலறைப் பெட்டியின் இடையிலே கொண்டுவிட்டால் சிறிதுநேரம்வரை தட்டிமுட்டித் தடுமாறுகின்றது. பின்னர் ஏதேனும் ஒரு அடையாளம் அகப்பட்டுவிட்டால் அதை யுணர்ந்து அங்கிருந்து தீனியறைக்கு நேரே செல்கின்றது. நேர்நிலை ஓராழி விடுவோற்குக் கைப்பிடிப்பித்தல் நேரேகுந்துதல், காலை யாட்டல் என்பவை வழக்கமாகப் படிந்துவிடுதல்போல, இவ்வெலிக்கும் அவ்வழியில் அடியெடுத்து வைக்கவேண்டிய அடிகளனைத்தும் திருப்பமனைத்தும் ஒருங்கே பழக்கமாக அமைந்துவிட்டன. குளவியின் மனதிலும் அது செல்லும் வழி இவ்வாறன்றோ அமைந்துவிடுகிறது. அதனைத்தான் நாம் இடவாராய்ச்சி என்றோம். நம்மைப்போல் பிறர் செய்வதைக் கண்டு எலி உணர்வதில்லை; அறிவாராய்ச்சி செய்து உணர்வதில்லை; செய்து தானே பார்க்கிறது; செய்யும்போது தவறிலாதவை பழக்கமாய்ப் படிந்துவிடுவதால் உணர்கின்றது. கண்டறிதல் கேட்டறிதல் ஆராய்ந்தறிதல் போலச் செய்தறிதல் என்பதனை இங்குக் காண்கிறோம்.

மீனின் அறிவு:—இவ்வுணர்வுப்பழக்கத்தில் என்ன காண்கிறோம். பழைய துய்த்துணர்வு கொண்டு இப்போதைய செயல்களை மாற்றியமைத்தலைக் காண்கிறோம். பழுப்பிலையறையில் தீனி யிருந்ததை முன்னர் உணர்ந்த எலி, பின்னர் அத்தீனியை நாடி அப் பழுப்பிலை ஒட்டிய அறையையே தேடிச்செல்கின்றது. இதுதானே அறிவுப் பெருக்கம் எனப் புகழப்படுவது. மிகக் கீழ்நிலையில் உள்ள மீன்களிடையும் இக்



நிலை காணப்படுகின்றது என்பதனை எர்க்ஸ் (Yerkes) என்பார் கீழ்க்கண்ட செய்காட்சிகொண்டு விளக்குகின்றார். ஒரு தண்ணீர்த் தொட்டியின் நடுவிலே நாற்புறமும் இடம்விட்டு அதன் இடையே நெடுக்காக ஒரு மரப்பலகையை நாட்டுகின்றார் அப்பலகையின் ஒரு முனையில் தீனியையும் மற்றொரு முனையில் மீனையும் வைக்கின்றார். அத்தினியின் நாற்றத்தால் வலிக்கப்பெற்ற மீன் தீனியை நாடி நீந்திச்செல்லுகிறது. செல்லுகையில் வலமாகத்தான் செல்லவேண்டும், இடமாகத்தான் செல்லவேண்டும், எனக் கட்டாயம் இல்லாமையால் மீன் வலமாகவும் செல்கிறது; இடமாகவும் செல்கிறது. வலப்புறத்தில் நடுவே குறுக்காக ஒரு கண்ணாடியை வைத்துத் தடுக்கின்றார். இப்போது என்ன நடக்கின்றது? பழைமைபோல வலமாகவும் இடமாகவும் செல்கிறது. ஆனால் வலமாகச் சென்றபோதெல்லாம் கண்ணாடியில் முட்டிக்கொண்டு பின் திரும்பிவந்து இடமாகச் செல்கிறது. இவ்வாறு பல தடவை முட்டி யுணர்ந்த பின் வலமாகப் போவதைவிட்டு நேரே இடமாக மட்டும் போகின்றது. இடமாகச் செல்லப் பழகுகிறது.

பயிற்சியாலோ பழக்கம்:—இடமாகத்தான் செல்லவேண்டும் என்றோ வலமாகத்தான் செல்லவேண்டும் என்றோ ஓரின்றியமையாமை இல்லாமையால், வலப்புறத்தை விட இடப்புறத்திலோ, இடப்புறத்தை விட வலப்புறத்திலோ போவதற்கு வழியில்லை. அங்ஙனமாயின் எத்துணைமுறை வலஞ் செல்கிறதோ அத்துணைமுறை இடமுஞ் செல்லுமன்றோ? பின்னர், முடிவில் ஏன் இடமாகச் செல்கின்றது? ஏன் வலமாகச் செல்லவில்லை. இதற்கு விளக்கங்கூறும் நடத்தைக் கொள்கையினர் கீழ்வருமாறு எடுத்துக் காட்டுகின்றனர். தொடக்கத்திலே எத்துணைமுறை வலம் செல்கின்றதோ அத்துணைமுறை இடஞ் செல்கின்றது. கண்ணாடியை இடையிலே இட்டபின்னும் அங்ஙனமே செல்கின்றது. பத்துமுறை இடம் செல்கின்றது. பத்துமுறை வலம் செல்கின்றது. இடம் செல்கின்றபோதெல்லாம் இடப்புறம்மட்டும்செல்கின்றது. வலப்புறம் செல்கின்றபோதோ கண்ணாடியில் முட்டிக் கொள்வதால் திரும்பிவந்து இடப்புறமாகவும் சென்றே தீனியை அடைகின்றது. ஆகவே வலப்புறம் சென்றமுறையிலும் இடப்புறமும் செல்கின்றது. இருபது முறை நீந்திச்செல்கின்றபோது இருபது முறையும் இடப்புறம் செல்கின்றது. பத்துமுறைதான் வலப்புறம் செல்லுகின்றது. ஆதலினால் மிகுதியாக நிகழ்ந்த இடப்புறச்செலவே பழக்கமாக உறைந்து போகின்றது. பன்முறை பயின்றதே பழக்கமாகப் பழுக்கின்றதாம். ஆனால் ஈது உண்மையை விளக்கவில்லை. பழக்கம் ஏற்படுவதற்கு முன், வலமும் இடமும் செல்லும் அம்மீன், வலப்புறம் செல்கின்றபோது கண்ணாடியில் முட்டிக்கொண்டதும் திரும்பி இடத்திற்கு வந்து அதன் பின்னரன்றோ இடப்புறம் செல்லுதல் வேண்டும். புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தால், அதன்பின் இடப்புறந்தான் செல்லவேண்டும் என்ற கட்டாயம் இல்லை; ஆதலின் வலப்புறமும் செல்லலாம்; இடப்புறமும் செல்லலாம். பத்துமுறை வலப்புறம் போனபோதெல்லாம் இடப்புறம் போயே இருக்கவேண்டும் என்று இவர்கள் கொள்கைப்படி எங்ஙனம் கூறுவது? இதனை இவர்கள் விளக்கவில்லையன்றோ? முட்டித் திரும்பியபின் இடப்புறந்தான் மீன் செல்கின்றது. ஏன் செல்கின்றது? இவர்கள் கொள்கைப்படி வலப்புறமுமன்றோ செல்லுதல்வேண்டும். முட்டித் திரும்பிய மீன், முட்டித்திரும்பிய வழியில் உடனே முந்திப்போகாதது எதனால் என்று அன்றோ இங்கு ஆராய்தல்வேண்டும். இடமாகச்சென்றபோது எடுத்தவேலை முடிகின்றதாலும் தீனியருகு செல்கின்றதாலும் நாம்புக்கிளர்ச்சி மிகுதியாகப் பாய்கின்றது; அக்கிளர்ச்சி உடலை மிகுதியும் இயக்குவிக்கின்றது. இவ்வாறு இயக்கம் தூண்டப்படுவதால் இடப்புறமே செல்லப் பழகுகின்றது அம் மீன் என வேறொருசாரார் எடுத்துக் காட்டுகின்றனர்.

மக்கேலின் செய்க்காட்சி:—இக் கொள்கையின் உண்மையைக்கண்டறியவேண்டிக் கீழ்க்கண்ட செய்க்காட்சியை மக்கேல் என்ற பெரியார் செய்துகண்டார்.

கீழ்மேல் (கிழக்கும் மேற்கும்) நீண்டும் தென்வடல் குறுகியும் உள்ள ஒரு தண்ணீர்த்தொட்டியை முன் வைத்தார். கீழ்மேல் நீண்டும் தென்வடல் குறுகியும் உள்ள சிறுமரவறையை அத்தொட்டியின் நடுவேவைத்தார். அறையின் மேற்குப்புறச் சுவரையும் தொட்டியின் மேற்குப்புறப்பலகையையும் ஒட்டிவைத்தார். மேற்குப்புறப் பலகையில்நடுவே அவ்வறையை வைத்ததால், தொட்டியிலே அவ்வறைக்கு வலத்திலும் இடத்திலும் ஒரே அகலமுள்ள சந்துகள் ஏற்பட்டன. இந்த அறையின் கிழக்குப்புறத்துச் சுவர்க்கும் தொட்டியின் கிழக்குப்புறப் பலகைக்கும் நடுவே ஒரு சந்தும் ஏற்பட்டது. இக் கீழைச்சந்து, தென்புறச் சந்தையும் வடபுறச்சந்தையும் ஒன்று சேர்த்தது. மரவறையின் வலப்புறச் சுவரிலும் இடப்புறச் சுவரிலும் நடுவே ஒன்றுக்கொன்று நேர்நேராக ஒவ்வொரு செருகு கதவுள்ள வாயிலமைத்தார். செருகுகதவுகளை மேலே தூக்கி வாயில்களை வெளியாக வைத்தார். அறையைச் சுற்றி முப்புறத்தும் வெளியிடம் இருந்தது. அவ்வெளியிடத்தில் தொட்டியின் வடகிழக்கு மூலையில் ஒரு சிறிய மரத்திண்ணை யமைத்தார். அரைத்தொட்டி யளவு தண்ணீர் ஊற்றினார். அந்தத் திண்ணையோ நீருக்குமேல் உயர்ந்து இருந்தது. திண்ணையிலிருந்து மேற்குப்புறமாக ஒரு சாய்ப்புப் பலகையும் தென்புறமாக ஒரு சாய்ப்புப் பலகையும் வெளிவந்து தண்ணீர் மட்டத்தில் மிதந்துகொண்டிருந்தன. அறைக்குள்ளே வெள்ளெலியொன்றைவிட்டார். நீரிலிருந்தும் தப்புவதுதானே அதன் நோக்கம். திண்ணையைச் சேரவே வெள்ளெலி முயன்றது. வடபுற வாயில்வழியாகச் சென்றால் வடபுறச் சந்தாக நீந்தி மேற்குப்புறமாகத் தொங்கும் சாய்ப்புப் பலகைமேலேறித் திண்ணையை நேரே சேரலாம். தென்புற வாயிலாகச் சென்றாலோ தென்புறச் சந்தையெல்லாம் கீழ்ப்புறமாக நீந்திக்கடந்து கீழைச்சந்தில் இடமாகத் திரும்பிக் கீழைச்சந்தையும் வடக்காக நீந்திக்கடந்து, தென்புறமாகத் தொங்கும் சாய்ப்புப்பலகைமேலேறிப் பின்னர்த் திண்ணையை அடைதல் கூடும். எனவே, தென்புறம் போவது சுற்றுவழியாகவும் வடபுறம்செல்வது நேர்வழியாகவும் கிடக்கின்றன. ஆகவே, அவ்வெள்ளெலி வடபுறம் செல்லவே பழகுகின்றது. இப்பழக்கம் அவ்வெலிக்குக் கைவந்தபின் வடபுறச்சந்தில் திண்ணையிலிருந்து கீழ்மேலாகத் தொங்கும் சாய்ப்புப்பலகையில் தகட்டைப் பரப்பினார்; அதன்மேலும் வெள்ளெலி ஏறிச் சென்

189114

றது. பின்னர் அத் தகட்டின்மேல் மின்னோட்டத்தை விட்டார். மின்னோட்டம் பாயும்போது அவ்வெள்ளெலி அத்தகட்டின் மேலேறியதும் தாக்குண்டு நீரில் துள்ளி விழுந்தது. அத்தகட்டைத் தொடுந்தோறும் இவ்வாறு மின்னோட்டத்தால் தாக்கப்பட்டது. இதனால் அவ்வெள்ளெலி அஞ்சி நடுங்கியது இருந்தாலும், தன் பழைய பழக்கத்தின் பயனாக அவ்வழியே செல்ல முயன்றது; அருகே வந்தது; எதிர்நின்று தயங்கியது; பின்வாங்கியது; குதித்துத் தாண்டியது. மின்னோட்டம் பாயும் சாய்ப்புப்பலகையில் இவ்வாறு சிலமுறை பயின்றபின்னர், அஃதிருக்கும் வடபுற வழியை எட்டியும் பாராது முன் சுற்றுவழியெனக் கண்ட தென்புற வழியாகவே சென்றது. தென்புறச் செருகுகதவை மூடிவைத்தாலும் அக்கதவண்டை வந்து மோதியதேயன்றித் திறந்திருக்கும் வடபுற வாயில் வழியாகப் போகவேஇல்லை. அவ் வடபுற வாயிலைக் கண்டபோது மின்னோட்டத் தாக்கல் நினைவிற்கு வந்தது போலும்.

இன்பநினைவாற் பழகுதல்:—இச்செய்க்காட்சியால், முன்சொன்ன இரண்டு கொள்கைகளும் பொய்த்துப் போகின்றன அன்றோ? பலமுறை பயின்றதே பழக்கமாக முற்றுகின்றதென்றால், இங்குப் பல முறைபயின்றதுஎது? வடபுறமாகச் சென்றதன்றோ? அஃது பழக்கமாய் நிலைத்ததா? பலமுறை பயின்ற வடபுறப்பழக்கம் மின்னோட்டத் தாக்கலால் அடிபோடும் மறைந்ததன்றோ? பன்முறை பயில்வதைப் பழக்கமென்று எங்ஙனம் கூறுவது! செயலின் முடிவை அடைவதால் கிளர்ச்சி மிகுதியாகி உடல் இயங்குவதால் பழக்கம் நிலைபெறுகின்றதென்பது இரண்டாவது கொள்கை. ஆனால் இவ்வெள்ளெலி தன்செயலின் முடிவாகிய திண்ணையை எப்புறம் சென்றபோது விரைவில் அடைந்தது. வடபுறமாகச் சென்றபோதன்றோ? அதுபற்றியன்றோ வடபுறம் செல்வது முதலில் பழக்கமாகியது. ஆனால் பின்னர் அவ்வடபுற வழியைமட்டுமா, வடபுற வாயிலையுமன்றோ எட்டிப்பாராது மறுபுறம் திரும்பியது. செயலின் முடிவை விரைவில் அடைவதால் நிலைபேறுற்றதே பழக்கமென்றால், இதுபோது ஏன் வடபுறம் செல்லவில்லை. இன்பமான வழி பழக்கமாகின்றது; துன்பமான வழி பதியாது மறைகின்றது. ஈதே உண்மை. இதனைப் புறக்கணித்தால் இடர்ப்படவேண்டுவதுதான்.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[576வது பக்கத் தொடர்ச்சி]

முனிவரர் படைத்த கூனி
மூர்க்கமே நினைத்துச் சொன்னாள்.

இனி வான்மீகத்தைத் தொடரலாவோம். இராமனென்றும் பரதனென்றுந் தனக்கு ஒருபொழுதும் வித்தியாச மில்லையென்று கைகேயி உரைத்ததற்கு மந்தரை அவள்மனந் திரியுமாறு செப்பியசொற்களும், கைகேயி அவைகளுக்கு இணங்காது மறுத்த மாற்றங்களும், மீண்டும் மந்தரை தன் முன்னைய மொழிகளை வற்புறுத்தியவாறும், இறுதியில் கைகேயி அச்சூழ்ச்சிக்கு வயமான வகையினையும், வான்மீகத்தில் வழங்கியுளவண்ணம் நாம் கண்டறிந்து தேர்ந்தபின், கம்பர் அவைகளைக் கையாண்ட நீர்மையினை உணரமுயல்வது தக்கதாகும். பின்வருவன வான்மீகம்:—

[மந்தரை, இவ்வாறு கைகேயி சொன்னதைக் கேட்டு அதிக வெறுப்புக்கொண்டு, அவள் தனக்கு வெகுமதியாகக் கொடுத்த அணியை வீசி எறிந்து, வெகு துக்கத்துடனும் கோபத்துடனும் அவளை நோக்கி, "நீங்கள் மடமையால் சமயமல்லாத சமயத்திற் சந்தோஷங் கொண்டிருக்கின்றீர்கள். உங்களைத் துக்கக்கடலின் நடுவில் இருப்பவர்களாக நீங்கள் அறிந்துகொள்ளவில்லை. துக்கம் என்னை வறட்டிக் கொண்டிருந்தபோதிலும் உங்கள் பேதைமையைக் கண்டு மனத்தினால் நகைக்கவேண்டியிருக்கிறது. பெரிய விசனம் வந்திருக்கையில் நீங்கள் துக்கப்பட வேண்டியிருக்கச் சந்தோஷப்படுகிறீர்களே! உங்களைக் கண்டு நான் இப்பொழுது துக்கப்படவேண்டி யிருக்கின்றது. புத்தியையுடைய எவள்தான் யமனையொத்த சக்களத்திகுமாரனுடைய க்ஷேமத்தை மெச்சுவள்? இராச்சியத்தில் உரிமையுள்ள பரதரைக் கண்டு நமக்கு இராச்சியம் கிடைக்குமோ மாட்டாதோ' என்று அஞ்சும் இராமனுடைய அச்சத்திற்கு நான் அஞ்சுகின்றேன். ஏனெனில், பயப்படுபவரிடத்தினின்றும் பயம் உண்டாகுமன்றோ? லக்ஷ்மண சத்துருக்கனர்களுக்கும் இராச்சியத்திற்கும் சம்மந்த மிருப்பினும், அவர்களிடத்தில் இராமருக்கு அச்சம் இல்லை. ஏனெனில், லக்ஷ்மணர் எப்பொழுதும் இராமரிடத்தில் அதிக அன்பும் ஆதரமும் வைத்திருக்கின்றார். இராமரிடம் லக்ஷ்மணர் அன்பு வைத்திருப்பதுபோல், சத்துருக்கனர் பரதரிடம் அன்பு வைத்திருக்கின்றார். லக்ஷ்மணர்சத்துருக்கனர்இவ்விருவரும் இராமரையும் பரதரையுஞ் சேர்ந்தவர்களாகையால் அவர்கள் இராச்சியத்தை விரும்பமாட்டார்கள். அன்றியும், பிறப்பினாலும் மற்ற இருவரைவிடப் பரதரே பெரியவர்; ஆகையால் அரசமுறை இவரையே மற்றைஇருவரினுங் கிட்டி யிருக்கின்றது. மற்றை இருவர்க்கும் இவரினும்அவ்வரசமுறை தூரமாயிருக்கின்றது. கல்விப்பயிற்சி யுள்ளவராயும் அரசநீதியில் மிகப் பழகியவராயும் காலத்திற்குத் தக்கபடி நடப்பவராயு மிருக்கும் இராமருடைய பயத்தால், உங்களுடைய புத்திரரான பரதரைச் சிந்தித்து நான் நடுங்குகின்றேன். கௌசல்யைக்குப் பாக்கியம் பிறந்துவிட்டது; நாளைத்தினம் புஷ்ய நக்ஷத்திரத்தில் அவளுடைய குமாரரான இராமருக்கு, அந்தணர்கள் சேர்ந்து பட்டாபிஷேகம் பண்ணிவைக்கப்போகின்றார்கள். கௌசல்யை வெகு சந்தோஷமடைந்து 'அரசருடைய தாயார்' என்ற பட்டம் பெற்று, தனது சத்துருக்களை யெல்லாம் தன்கீழ் அடக்கிக்கொண்டு விளங்கப்போகின்றாள். நீங்கள் கைகளைக் கூப்பிக்கொண்டு அவள்முன்னர் அடிமைபோல் நிற்கப்போகின்றீர்கள். நீங்கள் எங்களுடன் வேலைக்காரியைப்போற் கௌசல்யைமுன் நிற்க, உங்கள் குமாரரான பரதரும் இராமரிடம் கைகட்டி வேலைக்காரன்போல் நிற்கப்போகின்றார். இராமருடைய மனைவியும் அவள் தாதிமார்களும் களித்துக்கொண்டு அதிகாரம் பண்ணுவார்கள். பரதர் வேலைக்காரன்போல் நிற்க அதைப்பார்த்து உங்கள்



மருமகளும் அவள் தாதிமார்களும் கண்ணீர் ததும்ப நிற்பார்கள்" என்றாள்.

இவ்வாறு மிகவும் அன்பற்றவண்ணமாக மந்தரை சொல்லுவதைக் கேட்டுக் கைகேயி, இராமருடைய சிலாக்கியமான குணங்களை எடுத்து இவள்முன்னர் வருணித்துச் சொல்ல ஆரம்பித்தாள். "இராமன் வெகு தருமசிந்தை யுள்ளவன். பெரியவர்களிடம் பழகி அவர்களால் நல்லவழிக்குக் கொண்டுவரப்பட்டவன்; செய்நன்றி அறிபவன்; சத்தியசந்தன்; நன்னடக்கையுள்ளவன்; இராமன் மூத்த குமாரனாகையால் அரசநீதிப்படி பட்டத்துக்குத் தக்கவன். தனது தம்பிமார்களையும் வேலைக்காரர்களையும் வெகுகாலம் தகப்பனாரைப்போல் ரக்ஷிப்பான். இப்படியிருக்கக் கூனியாகிய நீ, அவனுடைய பட்டாபிஷேகத்துக்காக ஏன் துக்கப்படவேண்டும்? இராமன் இராச்சியம் ஆண்ட நூறு வருஷங்களுக்குஅப்பால் அவனிடமிருந்து எனது உத்தம குமாரனான பரதன், தலைமுறை தலைமுறையாக வந்த இந்தப் பட்டத்தைப் பெறுவான். இந்தச் சமயம் நாமெல்லாருஞ் சந்தோஷப்படவேண்டியிருக்க, மந்தரே, நீமட்டும் ஏன் இவ்வண்ணம் தவிக்கின்றாய்? எனக்கு இராமன் பரதனைவிடப் பிரியமானவன். இராமன், கௌசல்யையிடம் எவ்வளவுஅன்பும் ஆதரமுமாக இருக்கின்றானோ, அதனினும் மேலாகவே என்னிடத்தில் இருக்கின்றான். இராமனுக்கு இராச்சியம் கிடைத்ததென்றால், அது பரதனுக்குக் கிடைத்தாற் போலத்தான்; ஏனெனில், இராமன், தனது தம்பிகளைத் தன்னைப்போலப் பாவித்திருக்கின்றானே யல்லது வேறில்லை" என்றாள்.

இவ்வாறு கைகேயி சொல்ல, அதைக்கேட்ட மந்தரை, வெகு துக்கமடைந்து, உஷ்ணமாகப் பெருமூச்செறிந்து, அவளைப் பார்த்து, "பயனறிந்து தொழில் செய்யாததனால், சோகத்தாலும் விசனத்தாலும் நிறைந்த துக்கக்கடலில் நீங்கள் இப்பொழுது முழுகிவிட்டீர்கள். ஆனால், அது உங்களுக்குத்தெரியவில்லை. இப்பொழுது இராமர் பட்டத்துக்கு வரப்போகின்றார். அவருக்குப்பின் அவர் மகன். இராமர் பட்டத்துக்கு வந்துவிட்டாரானால் உங்கள் புத்திரர் பட்டத்துக்கு வருவதிலிருந்து விலக்கப்பட்டவராவார். கோபம் மட்டும் உங்களுக்கு அதிகமே ஒழிய, 'ஓர் அரசனுடைய ஒவ்வொரு குமாரரும் பட்டத்துக்கு வரவேண்டியவர்,' என்று நீங்கள் கொள்ளும் அபிப்பிராயம் சரியானதன்று என்று உங்களுக்குப் புலப்பட வில்லையே! எல்லாக் குமாரர்களும் பட்டத்துக்கு வருவார்களானாற் பின்னர் அவர்களுக்குட் சண்டையுண்டாகி நியாயம் மிகக் கெட்டுவிடுமன்றோ? அரசர்கள் தங்கள் இராச்சியத்தைத் தங்கள் மூத்தகுமாரனிடம் கொடுப்பதும், அல்லது அவனைவிட நல்லவராயிருக்கும் ஏனையோரிடத்துக் கொடுப்பதும் அதனாலேதான். புத்திர வாத்ஸல்ய முடையீர், உங்கள் புதல்வர், பட்டத்தை அடையாவிடில் அநாதரராய்ச் சுகமற்றுப் போய்விடுவார். இந்த விஷயத்தைக்குறித்து முன்னதாக உங்களிடம் தெரிவிக்க நான் இவ்வளவு சிரமப்பட்டு வந்தேன். என்னுடைய உட்கருத்தை நீங்கள் அறியவே இல்லை. உங்களுடைய சக்களத்திக்கு வரப்போகிற க்ஷேமத்தை உத்தேசித்து நீங்கள் எனக்கு வெகுமதி அளிக்கின்றீர்கள்! இராமர், இராச்சியத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு பயமில்லாமல் தாம் அரசாளும்பொருட்டுப் பரதரை வேறு தேசத்துக்காவது, அல்லது வேறு லோகத்துக்காவது நிச்சயமாக ஓட்டிவிடப்போகின்றார். பரதரோ இளம்பருவமுடையவர். நீங்களே இப்பொழுது அவரை மாமன் வீட்டுக்கு அனுப்பி யிருக்கிறீர்கள். அசையாப் பொருள்கூட நமக்குச் சமீபத்தில் எப்பொழுதும் இருக்குமானால் அதனிடத்தில் நமக்கு அன்பு உண்டாகின்றது. பரதர் இப்பொழுது அரசர் சமீபத்திலு மில்லை. சத்துருக்கனரும் பரதருடன் போய்விட்டார். இலக்ஷ்மணர் இராமரிடத்து இருப்பதுபோற் சத்துருக்கனர் பரதரிடத்திருக்கின்றார். 'ஒரு காட்டாள், வெட்டத்தக்க ஒரு மரத்தைப் பழக்கத்தாலுண்டாகிய நட்பால் வெட்டுதலாகிற அந்த ஆபத்தினின்று விடுவிக்க விரும்பி, அதைச்சுற்றி முட்புதர்போட்டு அதைக் காப்பாற்றினான்' என்று ஒரு கதையுஞ் சொல்லுகிறார்களன்றோ? இராமரை லக்ஷ்மணர் பாதுகாத்து வருகிறார். லக்ஷ்மணரும் இராமரைப் பாதுகாத்து வருகிறார். இவ்விருவருடைய நேசமும் அசுவினிதேவதைகளுடைய நேசம் போன்றது என்பது உலகம் முழுதுந் தெரிந்த விஷயம். ஆகையால், இராமர் லக்ஷ்மணருக்கு ஒரு நாளுந் தீங்கு செய்யப்போகிறதே இல்லை. இராமர் பரதருக்குத் தீங்குசெய்வார் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகையால், கேகயராஜன் வீட்டிலிருந்தபடியே உங்களுடைய குமாரராகிய பரதர் காட்டுக்கு ஓடிவிடுதல் நல்லவழி; இதுதான் எனக்கு நல்லதாகத் தோன்றுகிறது; உங்களுக்கும் க்ஷேமம். அப்படி இல்லாமல், பரதர் நல்லவழியில் தமது முன்னோர்களுடைய அரசை அடைவதாக இருந்தால் அது உங்களுடைய பந்துக்களுக்கும் நன்மையைத் தரும். இராமருக்குச் சுபாவ சத்துருவாயும், இன்பத்தையே அடையத்தக்கவராயு மிருக்கும் பரதர், பொருளை இழந்தபிறகு, பொருளையுடைய இராமரிடம் எவ்வாறு வாழப்போகின்றார்? காட்டில் ஒரு சிங்கத்தால் பின்தொடர்ந்தோடி அவமானப்படுத்தப்படும் யானைபோல் இராமரால் அவமானப்படுத்தப்படும் பரதரை நீங்கள்தாம் இரட்சிக்கவேண்டும். நீங்கள் உங்களுடைய அழகினாலுண்டான கருவத்தாற் கௌசலையை இதற்குமுன் அவமானஞ் செய்திருக்கிறீர்கள். அவள்மட்டும் நல்லபதவிக்கு வந்துவிட்டால் உங்களை ஏன் அவமானஞ் செய்யமாட்டாள்? இராமர் அநேக சமுத்திரங்களாலும் மலைகளாலும் நகரங்களாலும் நிறைந்த இந்த இராச்சியத்தை அடைந்துவிட்டால், நீங்களும் உங்கள் குமாரராகிய பரதரும் மிகவும் இழிவான வெகுவித அவமானங்களை அடையப்போகின்றீர்கள் என்பது நிச்சயம். இராமர் இராச்சியத்தைக் கைப்பற்றினால் பரதர் அழிந்துபோனார் என்பது திண்ணம். ஆகையால், நீங்கள் இப்பொழுது தீர்க்காலோசனை பண்ணிப் பாருங்கள். உங்கள் குமாரரை உடனே முடிசூட்டி வைக்க வழி தேடுங்கள். உங்கள் சத்துருவைக் காட்டுக்கனுப்பும் உபாயத்தை ஆலோசியுங்கள்" என்று வற்புறுத்திக் கூறினாள்.

இவ்வாறு மந்தரை சொல்லக் கேட்டவுடன், கைகேயி, தனக்கு வந்தகோபத்தால் முகம் துடிதுடிக்க வெகு உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, மந்தரையைப் பார்த்து, "இன்றைத்தினமே இராமனை இவ்விடத்திலிருந்து சீக்கிரமாகக் காட்டுக்கு நான் அனுப்பிவிடுகிறேன். எனது புத்திரனை பரதனுக்கே இளவரசுப்பட்டம் இதோ சூட்டி வைக்கின்றேன். எவ்வித உபாயத்தால் இவ்விரண்டையும் எளிதிற் செய்து முடிக்கலாம்? இராமன் ஒருபொழுதும் இராச்சியத்தை அடையக்கூடாது; பரதனே அடையவேண்டும். ஆலோசித்துப்பார்" என்றாள்.]

[இவை பண்டித நடேசசாஸ்திரியார் மொழிபெயர்ப்பு]

கம்பராமாயணத்தில் மந்தரைசூழ்ச்சிப்படலம், 68-வது செய்யுள்முதல், 79-வது செய்யுள்வரையிலுள்ள பன்னிரண்டு செய்யுள்களில் இவ்விடயங்களடங்கி யிருக்கின்றன. இவைகளினின்று கொண்டும் விடுத்தும் மாற்றியும் கம்பர் அமைத்த பரிசும், அன்னவாறு அமைத்ததற்குக் காரணமும் மிகவும் முக்கியமானவை. கைகேசியின் குணத்தியல்பை ஓர்ந்து கவியின் இதயத்தைக் கற்பதற்கு இவ்வாராய்ச்சி இன்றியமையாததாகும்.

"மன்னவர் மரபுநெறி மாற்றுதற் காற்றேன்" என்றொருகாரணமேசெப்பி மந்தரையைக் கைகேசி அடக்கினளென்னக் கம்பர் காட்டுவாரேனும், அகலாதுபின்

னும் சில எடுத்துரைத்த அம்மந்தரையின் மொழிகள், வான்மீகத்தின்படி கைகேயி வகுத்துரைத்தவைகளுக்கும் மறுமொழிபோன்று அமைந்திருக்கின்றன. மாசுணமனைய கொடியவன் மன்னனென்றும், மண்ணனைத்தும் தான்வெளவுதற் கிடையூறாய் நிற்கின்றான் பரதனென அஞ்சி நடுங்கிய அகத்தினன் இராமனென்றும், கோசலையின் கை இனி நிமிருமாயின் தன்னை இதுகாறும் பரிபவப்படுத்திவந்த கைகேசியைப் பெரிதும் வருத்தித் தன் பண்டைப்பழியைத் தீர்த்துக் கொள்வாளென்றும், பரதனும் மன்னன் புதல்வனேயாக இவனை மாத்திரம் அரசினின்று அறவே விலக்குவது நீதியன்றென்றும் குறிக்கின்ற பகுதிகள் நான்கினில், வான்மீகத்தின்படி கூனி காட்டிய காரணங்களை அடக்கலாம். இராமன் முடிசூடுவதால் கைகேசிக்குக் குறைவும், பரதன் முடிசூடினால் இவளுக்குச் சிறப்பும் வந்தெய்துமென வற்புறுத்தும் மொழிகள், அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவதன்றி ஒவ்வொரு காரணத்திற் கிடையேயும் இழைபிரிய இயலாமல் நெய்யப்பெற்றிருக்கின்றன. கம்பருடைய கூனி கொடுமையிற் குறைந்திலளேனும் கூடியவரையில் செவிசுடுங் கடுஞ்சொற்கள் பயிலாமல் குறிப்பினால் இக்கருத்துக்களையே உணர்த்தினாள். ஒள்ளியதன் உள்ளுணர்வொன்றே துணையெனப்பற்றி நின்ற கைகேயி மற்றதொன்றிற்கும் எதிர்மாற்றந்தர நினைத்திலளாய், நீதியல்லவும் நெறிமுறையல்லவும் நினையாத தன் சீலத்தால் கூனியின் வஞ்சனையைக் கடந்து நின்றனள். வான்மீகத்திலோ, அறிவினது ஆற்றல் இல்லாமலிருந்தும் அது தனக்கு இருப்பதுபோல் நினைத்துக் கூனியின் மொழிகளை ஆராயப் புகுந்தனளாய், அக்காரணங்கள் அமையாவென்று எதிர் விளம்ப முயன்றனள். மூத்தமைந்தனே வேந்தனாகும் முறைமையை முதலிற் காட்டியதோடு நில்லாமல், இராமன் மிக்க நல்லவன் என்றும், அவன் தன்னிடத்திலும் பரதனிடத்திலும் அன்பு அதிகமுடையவனென்றும், அவனரசனாவதால் தனக்கேனும் பரதனுக்கேனும் எவ்விதக் குறைவும் வருதற்கில்லையென்றும், கைகேயி பலபடப் பேசுவாளாயினாள். இவ்வாறு பேசுகையில், "இராமன் நூறு வருடங்கள் ஆண்டபின் இப்பேரரசு பரதனைச் சேர்ந்துவிடும்" என்றோர் சட்டமும் எடுத்துக் காட்டினாள் கைகேயி. இச்சட்டம் இவள் எங்குப் பெற்றாள் என்பது எமக்கு விளங்கவில்லை கூனிக்கும் விளங்கவில்லை; கைகேயியின் பேதைமையைக்கண்டு குலுங்கநகைத்தனள். மூத்தோன் நூறாண்டாண்டபின், இளையவன் தலைமுறைதலைமுறையாகப் பட்டத்தைத் பெறுவான், என்ற, வியவகாரமனைத்திற்கும் விரோதமாகக் கைகேயி விளம்பியதைக் கூனி மறுத்துரைத்தனளேனும், மூத்தவனே பட்டத்துக்குத் தக்கவன் என்று கைகேயி காட்டிய அரசநீதிக்கு ஏதும் எதிர் உரைத்திலள் அவள். பரதன் பட்டத்திற்கு வந்தால் கைகேயியின் பந்துக்களுக்கு நன்மையுண்டு என்று ஒருசொல் மந்தரை கூறினாள். கோசலையும் இராமனும் அவளுக்குக் கொடுமை பல செய்வரென்று பயமுங் காட்டினாள். "இராமனுக்கும் பரதனுக்கும் வேற்றுமை கொண்டிலேன்" என்று நெடிதுரைத்த கைகேயி இப்பொழுது கூனியின் கையிற் புகுந்தனள். தன்னிலை தடுமாறி அவளுக்கு அறவே வயமாயினாள். சினந்தனள், ஆனால் முன்போலச் சினம்கொண்டது இப்பொழுது கூனியின் மீதன்று.

# குறுந்தொகை

[517–வது பக்கத் தொடர்ச்சி]

அள்ளூர் நன்முல்லையார்] 96 [குறிஞ்சி

பாங்கியிற்கூட்டம் விரும்பிய தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளோடு உறழ்ந்து அவள் அவனது குறையை நயப்பக் கூறியது.

'அருவி வேங்கைப் பெருமலை நாடற்
கியானெவன் செய்கோ' என்றி; யானது
நகையென வுணரே னாயின்
என்னா குவைகொல் நன்னுத னீயே.

(உரை). 'என்னைக் குறையொன்றுநேர்ந்தானாக (நீ சொல்லும்) அருவியையும் வேங்கைமரங்களையும் உடைய பெரிய மலைநாடனுக்கு யான் செய்யத்தக்கது யாதுளது' என்று நீ சொல்லுகிறாய். அவ்வாறு நீ சொன்னதை விளையாட்டு மொழி என்று நான் அறிந்துளே னல்லேனாயின், நல்ல நுதலினையுடைய நங்காய், உன்னிலை யாதாகுமோ? (நான் அறியேன்.)

"தினைப்புனத்துக்கண் நாமிருந்துழி அங்குப் பலகாலும் வந்து உன்னை உற்றுநோக்கிச்சென்ற பெருமலைநாடன் என்னை யாதோ குறையிரப்பான் போன்று நான் தனித்திருந்தவிடத்துக் கையுறையாக நறுமாந்தழையை ஏந்தி அடிக்கடி வந்து, என்னிடத்து ஏதோ சொல்லலுற்று நாணத்தால் ஒன்றுஞ்சொல்லாது சென்றான். அவன் உன்னிடத்துக் காதற்குறிப்பினனாகத் தோன்றுகிறான். நீ அவனை ஏற்றுக்கோடற் பாலை," என்று கூறிய தோழிக்குத் தலைமகள், "யான் அவனை அறியேன். ஏதிலனொருவனைப் பற்றி இவ்வாறு நீ என்னிடஞ் சொல்வது அழகன்று" என்று மறுத்துக் கூற, அதற்குத் தோழி, "உண்மையை எனக்குரைக்காது ஒன்றும் அறியாள்போன்று இவ்வாறு நகையாடுவையாயின் பிந்தி நீதான் மிகவும் வருந்த நேரும்" என்று உறழ்ந்து கூறித் தலைமகளைத் தோழி குறைநயப்பித்தவாறு காண்க.

---

வெண்பூதியார்] 97 [நெய்தல்

ஒருவழித்தணந்த தலைமகன் வரைந்துகொள்ளாது பிரிவு நீட்டித்தவழி தலைமகள் ஆற்றாது தன்தோழிக்குச் சொல்லியது.

யானே யீண்டை யேனே; என்னலனே
ஆனா நோயொடு கான லஃதே;
துறைவன் தம்மூ ரானே;
மறையல ராகி மன்றத் தஃதே.

(உரை) நான் மட்டும் (உயிர்தரித்து) இங்கே உள்ளேன். எனது அழகெல்லாம் அமையாத காமநோயால் (முந்தி என்னை எதிர்ந்துகூடிப் பின் கைவிட்டகன்ற) கானற் பொழிலிடத்து அழிந்தொழிந்தன; துறைவனாகிய காதலன் தன்னூரிடத்தே சென்று தங்கிவிட்டான். பிறரறியாத எங்களது களவொழுக்கம் அலராகி அம்பலத்தேறிவிட்டது.

கானலஃது; மன்றத்தஃது = கானலது; மன்றத்தது, (விரித்தல் விகாரம்) மறை = இரகசியம்.



கோக்குள முற்றத்தார்] 98 [முல்லை

தான் வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வந்தும் தலைமகன் வாராமையால் ஆற்றாது வருந்திய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன், வாழி தோழி, நம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.

(உரை). தோழீ, நீ நீடுவாழ்வாயாக; நமது தோட்டத்திலே மாரிக்காலத்தே மழைநீர் பெய்து பசிய புதர்களிடத்துத் தழைத்துள்ள பீர்க்கின் மலர்கள் சிலவற்றைக் கையிற் கொண்டு அவரை (காதலரை)க் கிட்டிச் சென்று, "நன்னுதலினளாகிய தலைமகள் (உமது பிரிவால்) இப்பூவைப் போன்ற பசலை மீதூரப்பட்டாள்" என்று சொல்லுவாரை நான் பெறுவேனாயின் நல்லதாகும்; (அந்தோ, பெற்றிலேன்.)

இன்னள் - இதுபோன்ற நிறத்தினள். துணைவரைப் பிரிந்த மகளிரது பசலை பீர்க்கம்பூவின் நிறம்போன்று இருக்குமென்பதை,

காடிறந் தனரே காதலர்; மாமை
அரிநுண் பசலை பாயப் பீரத்
தெழின்மலர் புரைதல் வேண்டும். (அகம், 45)
யாமே யெமிய மாகத் தானே
பசுநிலா விரிந்த பல்கதிர் மதியிற்
பெருநல் லாய்கவி னொரீஇச் சிறுபீர்
வீயேர் வண்ணங் கொண்டன்று கொல்லோ
பானாட் கங்குலும் பகலும்
ஆனா தழுவோ ளாய்சிறு நுதலே. (ஷை, 57)

என்ற அகப்பாட்டுக்களால் அறிக.

---

ஔவையார்] 99 [முல்லை

பொருள்வயிற் பிரிந்து பொருள்முற்றி மீண்ட தலைமகன், "பிரிந்திருந்த காலை எம்மை எப்பொழுதேனும் நீர் நினைத்ததுண்டோ?" என்று தன்னை வினவிய தோழிக்குச் சொல்லியது.

உள்ளினெ னல்லெனோ யானே? பள்ளி
நினைத்தென னல்லெனோ பெரிதே; நினைத்து
மருண்டென னல்லெனோ? உலகத்துப் பண்பே,
நீடிய மாஅத்த கோடுதோய் மலிர்சிறை
இறைத்துணை சென்றற் றாஅங்
கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளலே.

(உரை). நான் உங்களைநினைத்தேன் அல்லேனோ? நினைத்ததும் பள்ளியிடத்துத் துயிலுதலை மிகவும்நினைத்தேன் அல்லேனோ? அதை நினைத்ததும், செய்வது இன்னதென்று அறியாது மயங்கினேன் அல்லேனோ? தூரத்தே சென்ற ஆண்பறவை மாமரத்தின் கிளையிற் கட்டிய கூட்டில் தங்கியிருந்த தன் பேட்டை நினைந்து அங்குச் சென்றாற்போல நான் இங்குவந்து அவ்வளவு மிக்க எனதுகாமம் இங்கே முற்றுப்பெறுதல் உலகத்தியல்பே.

மருண்டது, பொருள் முற்றுங்காறும் அங்கே தங்கிப் பின் தன்னூர்க்குத் திரும்புகிறதா, அல்லது மேற்கொண்ட தொழிலைச் சோரவிட்டு உடனே தன் மனைக்கு மீளுகிறதா என்ற மனத்தடுமாற்றத்தால். இரைதேடிச் சென்ற பறவை அதை யீட்டிக்கொண்டு அந்திநேரத்தில் தனது பேடையிருந்த கூட்டைச் சென்றடைந்தாற்போல, ஈட்டக்கருதிய பொருளைச் செய்துகொண்டு தனது மனைவி உறையும் இல்லிடை மீண்டு பின் இன்பநலந்துய்த்தல் உலகத்தியல் என்பான், 'காமம் ஈண்டுக் கடைக்கொளல் உலகத்துப் பண்பே' என்றான்.

பள்ளி - படுக்கை, அல்லது, படுக்குமிடம். மலிர் சிறை - (அன்மொழித் தொகை) பறவை. இறை - தங்கும் இடம்; கூடு. கடைக்கொளல்-முற்றுப்பெறுதல். நீடிய மலிர் சிறை- வெகு தூரத்தே சென்றபறவை; நீடியமா, உயர்ந்த மாமரம் என்றுமாம்.

அறத்தை முன்னூற்றிப் பொருளைப் பின்னீட்டி இன்பத்தை இறுதியில் துய்த்தலே முறைமையாதலின், 'காமங் கடைக்கொளல் உலகத்துப் பண்பு' என்றானுமாம்.

---

கபிலர்] 100 [குறிஞ்சி

பாங்கற்கூட்டத்தை விரும்பிய தலைமகன், தன்னை உற்றது வினாவிய பாங்கனுக்குத் தான் காதலுற்ற தலைமகளது பேரெழில் நலங்களைப் புகழ்ந்து பாராட்டி அவளது இன்றியமையாமையை எடுத்துரைத்தது.

அருவிப் பரப்பி னைவனம் வித்திப்
பருவிலைக் குவியொடு பசுமரல் கடுக்குங்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்
வல்வில் லோரிக் கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே;
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே.

(உரை). பசிய மரலையொத்த காந்தளை வேலியாக உடைய சிறிய குடில்களிலே வாழும் மறக்குடிகள், அருவிகள் பரந்துள்ள மலைப்பக்கங்களிலே மலைநெல்லை விதைத்து (அது விளையுங்காறும்) பசியுற்றபோது, விலையுயர்ந்த சந்தனம் அகில் இவற்றின் குவியலுடன் கடிய கண்ணையுடைய யானையின் தந்தத்தை விற்று மாறாகப்பெற்ற உணவுப் பொருள்களை உண்டுவாழும் வலிய வில்லையுடைய ஓரி யென்னும் வள்ளலின் கொல்லிமலையின் மேற்கிலுள்ள கொல்லிப் பாவையைப்போல மடப்பம் பொருந்தியவள் என்னாற் காதலிக்கப்பட்டவள்; ஆனால் அவளது மூங்கிலைப் போன்ற பருத்த தோள்கள் நான் கூடுவதற்கு அரியவாய் இருக்கின்றன.

மரல்-கற்றாழை. நொடுத்து-விற்று; பண்டமாற்றாகக்கொடுத்து; 'நொடை' யென்னும் பெயரடியாகப்பிறந்த வினைச்சொல். மடவந்தனள் - மடம் வந்தவள்; மடப்பம் பொருந்தியவள்,மடம் - மடப்பம்; இளமை. மணத்தல்-கூடுதல், தழுவுதல். பணை - மூங்கில். வல்வில்ஓரி - கடையெழுவள்ளல்களில் ஒருவன்; கொல்லி மலைக்குத் தலைவன்.

---

பரூஉமோவாய்ப் பதுமனார்] 101 [குறிஞ்சி

இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன், தலைமகள் தனக்கீந்த இன்பநலத்தைப் புகழ்ந்து பாராட்டியது.

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தே ணாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே,
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலோ டெமக்கே.

(துறை) பொருள் செய்யுமாறு தன்னை வலித்த நெஞ்சிற்குத் தலைமகளுடன் கூடித்தான் பெற்ற இன்பத்தின் மிகுதியைப் புகழ்ந்து அதனினும் பெரிதாகத் தான் மதிக்கும் பொருள் பிறிதொன்றுமில்லையெனக் கூறி அதனைச் செலவழுங்குவித்தது.

(உரை). தாமரைப்பூவைப்போன்ற மைதீற்றியகண்களையும், பொன்னையொத்த ஒளிவாய்ந்த மேனியையும், அழகு மிக்க வரிகளையுடைய அல்குலையும் உடைய அவ் விளமங்கையின் தோள்கள் எனது தோள்களோடு மாறுபடும்படி யான் அவளை மருவிக் கூடிய நாளுடன், விரிந்த திரைகளையுடைய பெரிய கடல்சூழ்ந்த மண்ணுலகமும், பெறுதற்கரிய சிறப்புவாய்ந்த தேவர்களின் விண்ணுலகமும் ஆகிய

இரண்டையும் சீர்தூக்கின், எனக்கு இவை சிறப்பற்றனவாகவே தோன்றும்.

புத்தேள் - கடவுள்; தெய்வம். சீர்தூக்கில் - தராசிலிட்டு நிறுத்துப்பார்த்தால். சாலா - கனம் (பெருமை) அற்றனவாம். மாண் - அழகுமாட்சிமைப்பட்ட குறுமகள்- சிறுபெண்; வயது முதிராத இளம்பெண். தோள் மாறுபடுதல் - (இடக்கர்)தனது வலத்தோளோடு அவள்தன் இடத்தோளும், இடத்தோளோடு அவனது வலத்தோளும் பொருந்தும்படி முயங்குதல்.

'எனக்கு வைகலோடு, உலகமும் புத்தேள்நாடும் இரண்டும் சீர்தூக்கிற் சாலா' எனக் கூட்டுக.

---

ஔவையார்] 102 [நெய்தல்

நெடிது சேணகன்ற தலைமகனது பிரிவை ஆற்றாது வருந்திய தலைமகள், 'தலைவர் விரைவின் மீள்வர்; அதுகாறும் நீ ஆற்றியிரு' என்று தன்னைத் தேற்றிய தோழிக்குச் சொல்லியது.

உள்ளி னுள்ளம் வேமே; உள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே; வருத்தி
வான்றோய் வற்றே காமம்;
சான்றோ ரல்லர்யாம் மரீஇ யோரே.

(உரை). (அவரது பிரிவின் கொடுமையை) நினைப்பேனாயின் எனதுள்ளம் வெந்திடும்; நினையாதொழிவேன் என்று எண்ணினால் என்னுள்ளம் என்னளவில் கட்டுப்பட்டு நில்லாது; காமமோ என்னை வருத்தி சாகச்செய்யும் அத்தன்மையதாய் இருக்கிறது; யான் விரும்பிக் கூடிய தலைவரோ நற்குணங்கள் அமைந்தவரல்லர்; (யான் எங்ஙனம் ஆற்றியிருப்பேன்?)

வான் தோய்வு - (உயிரைச் செகுத்து) விண்ணுலகேற்றல்; மரிக்கச் செய்தல். சான்றோர் - நற்குணங்கள் நிறைந்தவர்.

'எம்,' 'யாம்' என்றது தன்னோடு வேற்றுமையற்ற உயிர்ப்பாங்கியைத் தன்னுடன் உளப்படுத்திக் கூறியது.

---

வாயிலார் தேவனார்] 103 [நெய்தல்

வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன், குறித்த பருவத்தில் வாராமையால், தலைமகள் தனது கையறுநிலை புலப்படத் தோழிக்குக் கூறியது.

கடும்புன லொழுகிய நடுங்கரு ளள்ளற்
கவிரித ழன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக் கெவ்வ மாகத்
தூஉந் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர்நங் காதலர்;
வாழேன் போல்வல், தோழி, யானே.

(உரை). விரைந்தோடும் நீருடன்கூடிய சேற்றில் நடுங்கும்படி வருத்தத்தைச்செய்து இரையாகிய மீனை எதிர்பார்த்து நிற்கும் முண்முருக்கம்பூவின் இதழையொத்த செம்புள்ளிகளையுடைய இறகினையும் செவந்த வாயினையுமுடைய நாரைக்குத் தீங்காகத் தூவுகின்ற திவலையையுடைய, துயரத்தை மிகுதியாக விளைக்கும் வாடைக்காற்றுடன் கூடிய கூதிர்ப்பருவம் வந்தும், நங் காதலர் வருவாரல்லர்போலும் ; தோழீ, யான் இனி உயிர்தரித் திருக்கமாட்டேன் போலும்.

'நடுங்கஞர் நாரை' எனக்கூட்டி, 'நடுங்கத்தக்க துன்பத்தைச் செய்யும் நாரை' எனக்கொள்க. கவிர்-முண்முருக்கு. துவலை - திவலை. வாடை (ஆகுபெயர்) வாடைக்காற்றுடன் கூடிய கூதிர்ப்பருவம். 'அரும்பனி யளைஇய கூதிர்ப் பெருந்தண் வாடை' (ஐங்குறு 252) என்றார் பிறரும். வாடையுடன் கூடிய கூதிர்ப்பருவத்திலும் முன்பனிக் காலத்திலும் இரையைப்பெறாது நாரைகள் வருந்துமென்பதை,

வெண்குருகு நரல வாடை வீசும்
நுண்பஃ றுவலைய தண்பனி நாளே. (அகம், 13)
பெய்பனி நலிய வுய்தல் செல்லாது
குருகினநாலும் பிரிவருங் காலை. (ஐங்குறு. 457)

என்ற இடங்களிற் காண்க.

---

காவன்முல்லைப் பூதனார்] 104 [பாலை

பின்பனிக்காலத்தே தலைமகனது பிரிவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தனதாற்றாமை தோன்ற தோழிக்குக் கூறியது.

அம்ம, வாழி தோழி; காதலர்,
நூலறு முத்திற் றண்சித ருறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்,
பிரியு நாளும் பலவா குகவே.

(உரை). தோழீ, நான் சொல்வதைக் கேட்பாயாக; நூலறுந்து சிதறி வீழும் முத்தைப்போலக் குளிர்ந்த பனித்துளிகள் மிக வீழ்வதினால் (தளிர்த்த) தாளியின் குளிர்ந்த கொடியை விடியற்காலத்தில் பசுக்கள் மேயும் பனிமிக்க பின்பனிப் பருவத்தே காதலர், பிரிந்த நாட்களும் பலவாகும்படி, நம்மை விட்டுப் பிரிந்தனர். (நான் எங்ஙனம் ஆற்றியிருப்பேன்?)

சிதர் - திவலை, துளி. உறைப்ப - மிகவீழ. தாளி - மஞ்சிகம்; ஒருவகைக்கொடி. பவர் - கொடி. நாள் - காலை, விடியற்காலம். 'நாளாதந்து' (141), 'நாள்மோர் மாறும்' (160) என்ற 'பெரும்பாணாற்றுப்படை' அடிகளின் உரையைப் பார்க்க: ஆகுக - ஆக. கு, சாரியை.

---

நக்கீரர்] 105 [குறிஞ்சி

தலைமகன் வரைவு நீட்டித்தவிடத்து அவனது பண்டைக் களவொழுக்கத்தை நினைந்து வருந்தித் தலைமகள் தோழிக் குரைத்தது.

புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செல்குரல்
அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்குஞ்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கும்மே.

(உரை) புனத்துக்குரியவன் கடவுளுக்கென்று ஒதுக்கி வைத்த காவலைக்கொண்ட தோட்டத்துப் பொன்போன்று முதிர்ந்த சிறுதினையின் சில கதிர்களை அதனை (அல்லது, அவன்) அறியாது உண்ட மயில் வெறியுற்றாடும் மகளின் வனப்பை யொத்த வனப்பினதாய் அஞ்சி நடுங்கும் அச்சத்தைத் தருந் தெய்வத்தையுடைய மலைநாடனது பண்டைநட்பு இப்பொழுது நீர்நிறைந்த கண்ணோடு என் நினைவிற்கு வருகின்றது.

'புனவன் கடவுட்கிட்ட சிறுதினைச் சில்குரல்' என்று கூட்டுக. துடவை - தோட்டம். கடி-காவல். குரல் - கதிர். சூர் - அச்சத்தைத்தருந் தெய்வம்.

உள்ளுறை உவமம்:—தனது மலையிடத்து வாழும் மயில் கடவுளுக்கென்று புனவன் காவலிட்டு வைத்த தினைக் கதிரை அறியாமலுண்டு வெய்துற்று நடுங்கினாற் போல, தலைமகனும் தமர்காவலிலுள்ள என்னைக்களவிற்கூடி இன்பநலத்தையுண்டுவிட்டு வரைந்துகொள்ள அஞ்சி நடுங்குகின்றான் என்பதாம்.

---




## புதிய தமிழ்ப் புத்தகங்கள்

கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L.,
எழுதிய நூல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| தமிழ் இலக்கிய வரலாறு :— | | |
| இத்தகையதோர் ஆராய்ச்சி நூல் தமிழுலகிற்குப் புதியதாகும். 550 பக்கம் கலிக்கோ | 2 | 8 |
| தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் | 1 | 4 |
| திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, B.A., L.T., | | |
| History of Tamil Literature in English | 3 | 8 |
| Critical Studies in Kural | 1 | 8 |
| இன்னிலை மூலமும் உரையும் | 1 | 0 |
| பிரபோத சந்திரோதயம் (செய்யுள்) | 3 | 0 |
| பெரியபுராண ஆராய்ச்சி | 1 | 6 |
| இராமகிருஷ்ணர் விரிவான சரித்திரம் | 5 | 0 |
| வருண சிந்தாமணி (ஆராய்ச்சிநூல்) | 3 | 0 |
| முருகன் புகழ்மாலை (2-ம் பதிப்பு) முருகனைப்பற்றிய நூல்களையும், நூலாசிரியர்களின் வரலாறுகளையு முடையது. உயர்ந்த கட்டிடமுடையது | 3 | 0 |

விரிவான புத்தக விளம்பரக் கேட்லாக் இனும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

## முருகன் அல்லது அழகு

ஸ்ரீமான்-திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் யாத்தது. இஃது இயற்கை அழகை எடுத்துக்கூறும் நூல். இயற்கை அன்னையின் மாண்பை இந்நூற்கண் காணலாம். இந்நூற்கண் முருகன் சொற்பொருள் விளக்கம், அழகினியல், இளமைப்பேறு, இயற்கை மாண்பு, நோன்பு, வழிபாடுகளின் திறம், முருகனடியார் இயல்பு முதலியன ஓதப்பட்டிருக்கின்றன. இந்நூலை முற்றும் பயில்வோர் உள்ளத்தில், இயற்கை வழிபாட்டில் ஆர்வம், ஒரே கடவுள் ஒரே நெறி என்னும் உறுதி, எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாப் பேரறம் முதலியன நிலவும். இயற்கை வருணனையும் உரை நடையும் நெஞ்சைக் கவரும்.

விலை ரூபா 1.

| | ரூ. | அ. |
|---|---|---|
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... | 2 | 8 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் ... | 2 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ... | 1 | 0 |
| சைவத் திறவு ... | 0 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் வாங்குவோருக்குத் தபாற்செலவின்றி, மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

## கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

பிரசுரங்கள்.

### சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

### கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினையுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:— பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




## தனிப்பாடல்

### முருகன்

எம்பெருமானே இமையவர் தலைவா
செம்பொருட் டுணிவே சிற்பர முதலே
ஆதியும் நடுவு மந்தமு மகன்ற
சோதிமெய்ஞ் ஞானச் சுந்தர முதல்வ
மூவிரு முகமுடைத் தேவர் கடேவே
பன்னிரு திருவிழி யென்னுயிர்க் கிறைவ
ஆறிரு தடந்தோள் நாறுபூங் கடம்ப
அணிவரி திகழும் மணிகெழு மார்ப
பாவடி புகழுஞ் சேவடிச் செல்வ
மூந்நூ லணிந்த நன்னூற் புலவ
இருண்மல மழிக்குந் திருநெடு வேல
நாவலர் நவின்ற தூமயின் வாகன
அருட்பெருங் கடலே குணப்பெரு மலையே
விரிந்தது வெளியே யெழுந்த சீரவளியே
அகவிருள் கெடுக்கும் கதிரொளிப் பகவ
ஆருயிர் மருந்தே அடியவர் விருந்தே
ஆரசங் காரர் சுப்பிர மணியா
நந்தார் செந்தூர்க் கந்தா எந்தாய்
அட்ட மாகிரிச் சிட்டர்கள் நாவல
நல்லை மேவிய குல்லையந் தோளா
சோதி மாமலை வேத வேதிய
கங்கை மைந்த கார்த்திகை சிறுவ
மங்கை பங்காளன் வழிபடு தேசிக
அரிதிரு மருக கரியொரு துணைவ
விரிபொழிற் குறிஞ்சி யுயர்நிலக் கிழவ
பைந்தமிழ் தெரித்த நந்தா விளக்கே
குஞ்சரி மணாள குறத்தி நாயக
சோகுயர் வீர வாகு சகோதர
தோன்றாத் துணையே சான்றோர் சுவைப்பே
மருட்கலி யுகத்தி லருட்பெருஞ் செல்வ
அருளுருக் கொண்ட பரமசற் குரவநின்
இருவினை கெடுக்கும் முருக மந்திரம்
இரவும் பகலும் எந்த நேரமும்
மனதிலும் வாயிலும் மறவா
அருவா மருளி யாண்டுகொள் ளுதியே.

---

மூவிரு முகமும் ஆறிரு நோக்கமும்
பன்னிரு தோளும் மின்னொளி வேலும்
தாமரைத் தாளும் தையலார் பாகமும்
மேவிய கருணை வியன்பெரு வடிவம்
நெஞ்சினுள் நீங்காது நினைக்கின்
அஞ்சுவ தில்லை பிறப்பிறப் பாளுமே.

நாவாலி. ந. சோமசுந்தரம்பிள்ளை.

## வர்த்தமானம்

சென்னைச் சட்டசபை எலக்ஷனில் யூனிவர்ஸிடி பிரதிநிதியாக ஸ்ரீமான் K. T. பால் அவர்கள் நிற்கப்போவதாக அறிகின்றோம். புதிய சீர்திருத்தத்திற்குப் பிறகு ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி ஐயரவர்களே இப்பகுதியின் பிரதிநிதியாக விருந்து வருகின்றார்.

***

இந்தியச் சட்டசபை எலக்ஷனும், ராஜ்ய சபை எலக்ஷனும் செப்டம்பர்மாதம் 9-ந்தேதியன்று நடைபெறலாகும் என்றும், மேற்கூறிய சபைகளுக்கு அபேக்ஷகராக நிற்பவர் ஆகஸ்டு மாதம் 7-ந்தேதிக்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்றும் ஒரு வரசாங்கவறிக்கை யறிவிக்கின்றது.

***

சென்னை அரசாங்கவறிக்கை கூறுவதாவது:—ஜூலை 17-ந் தேதி அறிக்கைக்குப் பிறகு, சத்தியாக்கிரஹக் குற்றவாளிகளில் 201பேர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதின்மேல் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தண்டனை அடைந்தவர்களில் 3 பேர், தாங்கள் செய்ததற்கு வருந்தி இனி இத்தகையதொன்றும் செய்வதில்லை என்று வாக்குக் கொடுத்ததின்மேல் விடுதலை செய்யப்பட்டனர். இதுவரை 331 பேர்கள் மன்னிக்கப்பட்டுள்ளனர்.


Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
*Head Office:*-9, Old Court House St., Calcutta.

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over
Rs. 1,47,000,00

Prompt settlement of Claims. Claims paid exceed
Rs. 67,000,00

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply to the Company to-day.*

R. G. DAS & Co, OR K. S. GOPALAYYA
*Managers.* *Branch Secretary,*
*Loane Square, Broadway, Madras.*



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்டுகள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)

SADVAIDYASALA NANJANGUD
SOLE AGENTS THE UNITED CONCERN, MADRAS

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்

அமிர்தாமலக தைலம்
டிப்போ.,
பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA NANJANGUD

பிருங்காமலக தைலம்
பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.

ஸோல் ஏஜெண்ட்:-யுனைடட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு, சென்னை.


18914

KALANILAYAM.
REG. NO. M, 2324.

## பாரதி

### தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணா | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

### காந்திக்கு ஜேய்!

கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினால் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 முந்துங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்
373 எஸ்பிளநேடு, சேன்னை.

## அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும்,அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

## ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல் ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)